மலர்-5 இதழ்-114 மே 16-31 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

மாதமிருமுறை

இறப்பிற்குபின் கர்மா, தகனம் செய்யும் கால அவகாசம்



www.aanmeegamalar.com
e- magazine

## ஓடும் ரயிலை நிறுத்தியவர்

## காசி, ராமேசுவரத்தை கையில் காட்டியவர்

# சூட்டுகோல் மாயாண்டி சித்தர்

# நோய்கிருமிகளை போக்கும் வழிமுறைகள்




வெயிலில் காலையில் 8 மணிக்கு முன்னாலும் மாலை 5 முதல் 6 மணி வரையில் உள்ள வெயிலில் அரை மணி நேரம்நின்றால் அனைத்துவிதமான வியாதிகளும்கட்டுப் படுவதோடு, மூச்சுப் பயிற்சியும் செய்ய வைட்டமின் டி சத்தும் உடலால் கிரகிக்கப்படும்.

கொரோனா நோய் கிருமி போன்ற கொடூர நோய்க் கிருமிகளை தடுக்க, கைகழுவவும் குளிக்கவும், கீழ்க்கண்ட கலவையை உபயோகிக்க தொற்றைத் அடியோடு தவிர்க்கலாம்.

1. வேப்பிலைக் கொத்து(ஒரு கொத்து)
2. குப்பை மேனி ஒரு கொத்து
3. படிகாரம்(10 கிராம்)
4. கஸ்தூரி மஞ்சள் தூள் (20 கிராம்)
5. சாதாரண அயோடின் கலக்காத கல்லுப்பு 150 கிராம்

அரை வாளி தண்ணீரில் கரைத்து வெயிலில் ஒரு மணி நேரம் வைத்திருந்து குளிக்கவும். உடலில் எங்கே கிருமிகள் இருந்தாலும், எப்படிப்பட்ட கிருமிகளும்செத்தொழியும்.

# உயரிய பதவி பெற திட்டை தலத்திற்கு செல்லுங்கள்…

சப்தரிஷிகளுள் ஒருவரான ஆங்கீரஸ முனிவரின் மகனாகிய பிரகஸ்பதி வாழ்வில் உன்னத இடத்தை அடைய வேண்டும் என்ற இலட்சியத்துடன் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்று சிவபெருமானைக் குறித்து கடுந்தவம் மேற்கொண்டார்.

பிரகஸ்பதி தவத்துக்கு இறங்கிய எம்பெருமான் திட்டை ஸ்தலத்தில்அவருக்கு காட்சி கொடுத்தார். அதன் பயனாக கிரக பதவி பெற்று நவக்ரகங்களில் சுப கிரகமாக பதவி பெற்றார்.

நவக்கிரகங்களுள் முதன்மையாகி தேவர்களுக்குக்குரு எனும் நிலையைப் பெற்றார். வியாழன் எனும் பெயரும் பெற்றார். ஒருவருக்குதலைமைப்பதவி, அதிகாரம், செல்வம், கல்வி, ஒழுக்கம், பிள்ளைப்பேறு ஆகியவை சுபக் கிரகமாகத் திகழும் குரு பகவானின் கருணையினால் கிடைக்கிறது.

மேற்கண்ட பலன்களைப் பெறவும், உயரிய பதவி அடையவிரும்புபவர்கள் அவசியம் திட்டை தலத்திற்கு சென்று வந்தால் பலன் கிடைக்கும்.




# சித்தத்தை கடக்க பத்தாயிரம் ஜென்மம் கடக்கவேண்டும்

விழிப்பு என்பது மனதின் முதல் நிலை அடுத்த நிலை என்பது சித்தம், இது மனம் உறங்கும் பொழுது தான் விழித்தி கொள்ளும் இதில் தான் முன் ஜென்ம கர்மா செயல்கள், தெய்வங்களின் ஆசிகள், மந்திர உச்சாடன பதிவுகள் மற்றும் பஞ்சபூத கலவையில் ஆனா பூமியில் உள்ள ஆகர்ஷண சக்திகள் நிறைந்து நிற்கும்.




சித்தத்தில் மனம் ஒடுங்கும் பொழுது சக்திதேவியர்கள் வசப்படுவார்கள். இவர்களால் சித்து வேலைகளை செய்யமுடியும். இவர்களின் முதல் படிநிலைகளை மந்திரவாதிகள் என்று நூல்கள் சொல்கிறது. இரண்டாவது நிலைக்கு இவர்கள் செல்லும் பொழுதும் காயசுத்தியும் காயசித்தியும் பெற்று சித்தத்தை கடந்தவர்காளாக உருமாறுகிறார்கள். இவைகள் எல்லாம் ஒரு மனிதனுக்கு சாத்தியமாக பத்தாயிரம் ஜென்ம பிறப்புகள் வேண்டும் என காகபுஜண்டர் உரைக்கிறார்.

# கிழமைகளுக்குரிய பிரதோஷ பலன்கள்




## ஞாயிறு பிரதோஷம்

சூரிய திசை நடப்பவர்கள் கண்டிபாக ஞாயிறு அன்று வரும் பிரதோசத்திற்கு செல்ல வேண்டும். இதனால் சூரிய பகவன் அருள் நமக்கு கிட்டும். இந்த திசையினால் வரும் துன்பம் விலகும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.

## திங்கள் பிரதோஷம்

பிரதோஷத்தில் ஸோமவரம் (திங்கள்) மிகவும் சிறப்பு வாய்ந்தது. சந்திர திசை நடப்பவர்கள், சந்திரனை லக்னாதிபதியாக கொண்டவர்கள் திங்கள் அன்று வரும் பிரதோசத்திற்கு செல்ல வேண்டும். இதனால் மன நிம்மதியும் மகிழ்ச்சியும் கிட்டும். மன வலிமை பெருகும்.

## செவ்வாய் பிரதோஷம்

செவ்வாய் திசை நடப்பவர்கள், செவ்வாயை லக்னாதிபதியாக கொண்டவர்கள் செவ்வாய் அன்று வரும் பிரதோசத்திற்கு செல்ல வேண்டும். மனிதனுக்கு வரும் ரூனம் மற்றும் ரணத்தை நீக்க கூடிய பிரதோஷம் இது. இதனால் செவ்வாயால் வரும் கெடு பலன் நீங்கும். பித்ரு தோஷம் நீங்கும். கடன் தொல்லை தீரும். எந்த ராசி, நக்ஷத்திரத்தை உடையவரக இருந்தாலும், ஒரு செவ்வாய் பிரதோஷமாவது வைதீஸ்வரன் கோவில் சென்று சித்தாமிர்த தீர்த்ததில் பிரதோஷ நேரத்திலே நீராடி வைத்தியநாதனை வழிபட்டால் அவர்களுக்கு வரும் ருனமும், ரணமும் நீங்கும் என்பது சிவ வாக்கு.

## புதன் பிரதோஷம்

புதன் திசை நடப்பவர்கள், புதனை லக்னாதிபதியாக கொண்டவர்கள் புதன் அன்று வரும் பிரதோசத்திற்கு செல்ல வேண்டும். இதனால் புதனால் வரும் கெடு பலன் நீங்கும். கல்வி சிறக்கும். அறிவு வளரும். படிக்காத பிள்ளை படிக்கும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தவறாமல் புதன் அன்று வரும் பிரதோசத்திற்கு அழைத்து செல்ல வேண்டும், இதனால் அவர்கள் கல்வி சிறக்கும். தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவார்கள்.

## வியாழன் பிரதோஷம்

குரு பார்க்க கோடி நன்மை. குரு திசை நடப்பவர்கள், குருவை லக்னாதிபதியாக கொண்டவர்கள் வியாழன் அன்று வரும் பிரதேசத்திற்கு செல்ல வேண்டும். இதனால் கிரக தோசத்தால் ஏற்படும் தீமை குரையும்.

## வெள்ளி பிரதோஷம்

சுக்ர திசை நடப்பவர்கள், சுக்கிரனை லக்னாதிபதியாக கொண்டவர்கள் வெள்ளி அன்று வரும் பிரதோசத்திற்கு செல்ல வேண்டும். இதனால் உறவு வளப்படும் . சகல ஐஸ்வர்யங்களும் கிட்டும்.

## சனி மஹா பிரதோஷம்

எந்த திசை நடந்தாலும் சனி பிரதோஷம் அன்று கோவிலுக்கு சென்று சிவனை வழிபடுவது சிறப்பு. ஏழரை சனி, அஸ்தம சனி நடப்பவர்கள் சனியினால் வரும் துன்பத்தை போக்க கண்டிப்பாக சனி பிரதோஷத்திற்கு செல்ல வேண்டும். ஒரு சனி பிரதோஷம் சென்றால் 120 வருடம் பிரதோஷம் சென்ற பலன் கிடைக்கும். இதனால் கிரக தோசத்தால் ஏற்படும் தீமை குரையும்.

# மரண பயத்தை போக்கும் மந்திரம்

கொரானா என்ற தீவிர அரக்கனால், உலகமே மரண பீதியில் உறைந்திருக்கிறது. ஒருசிலர் மரண பயத்தை வெளியில் காட்டாவிட்டாலும், உள்ளுக்குள் அச்சத்துடனேயே வாழ்கிறோம்.

இந்த நேரத்தில் நமது உயிர் பயத்தை போக்கி, உயிரை காக்கும் ஒரு சிவ மந்திரத்தை தொடர்ந்து உச்சரித்தால் மேற்கண்ட பீதி விலகும்.




ரிக் வேதத்திலும், யஜுர் வேதத்திலும் காணப்படும் இந்த மந்திரத்தை "மஹாம்ருத்யுஞ்ஜய மந்திரம்" எனக் கூறப்படுகிறது.

இம்மந்திரத்தைக் கண்டறிந்தவர் மார்கண்டேய முனிவர். இது முக்கண்களையுடைய சிவபிரானிடம், சாகா வரத்தை வேண்டுவதாக அமைந்துள்ளது.

இளம் வயதிலேயே மரணத்தின் விளிம்பில் (நோய்வாய்ப்பட்டு) இருப்பவர்களுக்கு தங்களுடைய மரண பயத்தை போக்கும் மிகவும் சக்தி வாய்ந்த மந்திரம் இது.

**ம்ருத்யுஞ்ஜய மந்திரம்:**

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டிவர்தனம் !
உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்யூர் முக்ஷீய மாம்ருதாத் !!

**மந்திரத்தின் பொருள்:**

ஓம் முக்கண்ணுடையவரே !எல்லா வளமும், எல்லா நலமும் பெருகும்படிச் செய்பவரே! நாங்கள் உம்மை யாகத்தினால் பூசிக்கிறோம். வெள்ளரிப் பழம் போல, என்னை இறப்பின் பிடியில் இருந்து விடுவித்து, எனக்கு இறவாமையை அருளும். என்பது பொருள்.

மரண பயம் உள்ளவர்கள் மேற்கண்ட இந்த மந்திரத்தை தினமும் 108 முறை கூறிவந்தால் மரண பயம் நீங்கும்.

# தோஷம் போக்கும் மயிலிறகு




மயில் இறகை நகை மற்றும் பணம் வைக்கும் அலமாரியில் ஒரு மயில் இறகை வைத்தால் செல்வம் அதிகம் சேர்வதோடு, நிலைக்கும் என்பது ஜீதிகம்.

அதுமட்டுமின்றி மயில் இறகு பல தோஷங்களை நீக்கும் தன்மை கொண்டது.

மூன்று மயில் இறகை ஒன்று சேர்த்து கருப்பு நிற கயிற்றினால் கட்டி, சிறிது பாக்கை நீரில் போட்டு, அந்நீரைத் தெளித்தவாறு ‘ஓம் சனீஸ்வராய நமஹ’ என்று தினமும் 21 முறை உச்சரிக்க வேண்டும் இவ்வாறு செய்தால் சனி தோஷம் நீங்கும்.

வீட்டின் வாஸ்து தோஷத்தை நீக்க எட்டு மயில் இறகை ஒன்று சேர்த்து, ஒரு வெள்ளை நிற கயிற்றினால் கட்டி, பூஜை அறையில் வைத்து ‘ஓம் சோமாய நமஹ’ என்ற மந்திரத்தை உச்சரித்து வர வேண்டும்.

மயில் இறகை வீட்டின் முன் வைப்பதால், வீட்டினுள் எதிர்மறை ஆற்றல்கள் நுழைவதைத் தடுப்பதோடு, வீட்டில் இருக்கும் எதிர்மறை ஆற்றல்களும் நீங்கும்.

ஒருவர் அலுவலகத்தில் தாம் அமரும் இடத்தில் மயில் இறகை வைப்பதன் மூலம், அவரது இடத்தின் அழகு மேம்படுவதோடு, உற்பத்தி திறனும் அதிகரிக்குமாம்.

திருமணமான தம்பதியர்கள், தங்களின் படுக்கை அறையில் மயில் இறகை வைத்திருப்பதன் மூலம், தம்பதியருக்குள் இருக்கும் பிரச்சனைகள் நீங்கி, அன்யோன்யம் மற்றும் புரிதல் அதிகரிக்கும்.

# வசந்த நவராத்திரி

# தோன்றிய வரலாறு

அம்பாளுக்கு விருப்பமான நவராத்திரியாக நான்கு நவராத்திரிகள் சொல்லப்படுகின்றன. அவை, ஆடி மாதத்தில் வரும் 'ஆஷாட நவராத்திரி', புரட்டாசி மாதத்தில் வரும் 'சாரதா நவராத்திரி', மாசி மாதத்தில் வரும் 'சியாமளா நவராத்திரி', வசந்த காலமாக கருதப்படும் பங்குனி மாதத்தில் வரும் 'வசந்த நவராத்திரி' ஆகியவையாகும்.

இதன்படி வசந்த நவராத்திரி தோன்றிய விதத்தைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

அயோத்தி தேசத்தை துருவசிந்து என்ற மன்னன் ஆட்சி செய்தான். அவனுக்கு மனோரமா, லீலாவதி என்று இரண்டு மனைவிகள். துருவசிந்து, வேட்டைக்கு சென்ற இடத்தில் சிங்கம் தாக்கி இறந்ததை அடுத்து, அடுத்த மன்னன் யார் என்ற பிரச்சினை எழுந்தது. முறைப்படி முதல் மனைவியான மனோரமாவின் மகன் சுதர்சனுக்கு முடிசூட்ட முடிவு செய்யப்பட்டது. ஆனால் லீலாவதியின் தந்தை சத்ருஜித், தன்னுடைய பேரனும், லீலாவதியின் மகனுமான யுதஜித்துக்கு முடிசூட்ட நினைத்தான்.

இதையறிந்த மனோரமாவின் தந்தை வீரசேனன், சத்ருஜித்தை எதிர்த்தான். இவருக்குமான போரில் வீரசேனன் கொல்லப்பட்டான். மனோரமாவும், சுதர்சனும் உயிருக்கு பயந்து காட்டிற்குள் சென்றனர். அங்கு அவர்கள் இருவரும் பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தில் தங்கினர்.

அயோத்தியின் அரச பொறுப்பு யுதஜித் வசம் வந்தது. அவன் தன் படையை அனுப்பி, சுதர்சனை கண்டுபிடிக்க உத்தரவிட்டான். சுதர்சனும், அவனது தாயாரும் பரத்வாஜ முனிவர் ஆசிரமத்தில் இருப்பதை அறிந்து, அவர்களை கைது செய்ய யுதஜித் முன்வந்தான். ஆனால்



அதற்கு பரத்வாஜ முனிவர் எதிர்ப்பு தெரிவித்தார். இதனால் அவரையும் கைது செய்ய நினைத்தான், யுதஜித். அப்போது அவனோடு இருந்த அமைச்சர்கள், "முனிவர்களை எதிர்ப்பது நமக்கு நல்லதல்ல" என்று கூறியதை அடுத்து, தன் நடவடிக்கையை கைவிட்டு, மீண்டும் நாட்டிக்குச் சென்றான்.



புனிதவேல்

ஆசிரமத்தில் இருந்த சுதர்சனுக்கு 'க்லீம்' என்ற அம்பாளின் பீஜ மந்திரத்தை, பரத்வாஜ முனிவர் உபதேசித்தார். அதை இடைவிடாது சொல்லி வந்த சுதர்சன், ஒரு கட்டத்தில் தவ நிலைக்குச் சென்றான். அந்த தவத்தால், அவன் முன்பாக தோன்றிய அம்பாள், பல சக்தி வாய்ந்ததும், அழிவில்லாததுமான ஆயுதங்களை அவனுக்கு வழங்கினாள்.

ஒரு முறை பனாரஸ் என்ற நாட்டின் ஒற்றர்கள், பரத்வாஜ முனிவர் ஆசிரமம் வழியாகச் சென்றபோது, சுதர்சன் பலவிதமான ஆயுதங்களை லாவகமாக கையாள்வதைக் கண்டனர். அது பற்றி பனாரஸ் அரசனிடம் சொல்லி, இளவரசியை சுதர்சனுக்கு மணம் முடிக்கலாம் என்று கூறினர். பனாரஸ் மன்னனும், சுதர்சனை முறைப்படி அழைத்துபேசி திருமணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தான்.

இதையறிந்த யுதஜித், பனாரஸ் நாட்டின் மீது படையெடுத் தான். அப்போது சுதர்சன் தன்னி டம் இருந்த சக்தி வாய்ந்த ஆயுதங்களைக்கொண்டு, யுதஜித்தைவெற்றி கொண்டான்.

போருக்குப்பின் சுதர்சன் சசி கலா திருமணம் நடைபெற்றது. அனைவரும் தேவியின் மந்திரத்தை உச்சரித்து அவளை வணங்கினர். இதனால் மகிழ்ந்த பராசக்தி, அவர்கள் முன்பாக தோன்றி, "என்னை வருடந்தோறும் வசந்த காலத்தில் வழிபாடு செய்யுங்கள். உங்கள் துன்பங்கள் அனைத்தும் மறைந்து, நன்மைகள் நடைபெறும்" என்று கூறி மறைந்தாள். திருமணத்திற்குப்பின், பரத்வாஜ முனிவரின் அறிவுரைப்படி அயோத்தியின் அரசனாக சுதர் சன் முடிசூட்டிக்கொண்டு, தன் மக்களுடன் ஆண்டுதோறும் வசந்த காலத்தில் வசந்த நவராத்திரியை கடைப்பிடித்து வந்தான். இப்படி தோன்றியதுதான் வசந்த நவராத்திரி என்று சொல்லப்படுகிறது.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

## பக்தனை ஜாமினில் எடுத்த ராமன்

ஆந்திராவில் உள்ள பத்ராசலம் ராமர் கோவில் மிகப் பிரபலம். அந்த ஊரை பலநூறு ஆண்டுகளுக்கு முன்னால் தானீஷா நவாப் என்பவன் ஆண்டு வந்தான். அவன் ஆட்சியில் கோபண்ணா என்பவர் பத்ராசலத்தின் தாசில்தாராக இருந்தார்.

அவர் ராமனுடைய வரலாற்றை முழுவதுமாக படித்து ராம நாமத்திலேயே இருப்பார். இந்த கோபண்ணா தான் ராமர் கோவிலைப் புதுப்பித்துக் கட்டியவர். அதற்குப் பணம் தேவைப்பட்ட போது மக்களிடம் வரியாக வசூலித்த பொற்காசுகளை அப்படியே கோவில் கட்ட செலவிட்டு விட்டார்.

இதையறிந்த தானீஷா என்னிடம் அனுமதி வாங்காமல் வரிப்பணத்தை எடுத்து நீ எப்படி கோவில் கட்டலாம் என்று கேட்டு அவருக்கு 12 வருட சிறைத் தண்டனையை விதித்தான். கோபண்ணா உடனே ராமனை எண்ணி உருகி அழுதார். இந்த நிலையில் ராமர் லட்சுமணனுடன் வேடர்கள் வடிவில் வந்தான்.

தானீஷாவைச் சந்தித்து கோபண்ணா சார்பாக அவர் கோவில் கட்ட செலவழித்த அவ்வளவு பொற்காசுகளையும் திரும்பக் கொடுத்து. ஜாமீனில் மீட்பதைப்போன்று கோபன்னாவை மீட்டார்.

தனக்காக பொற்காசுகளை கொடுத்தது சாட்சாத் அந்த ராமனும் லட்சுமணனுமே என்பது கோபண்ணாவுக்கு பிறகுதான் தெரிந்தது. இன்றும் ஆந்திராவில் உள்ள ஒரு மியூசியத்தில் ராமர் நவாப்பிடம் கொடுத்த பொற்காசுகள் நவாப் பின் பொற்காசுகள் என்ற பெயரில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.





# ஊர்மிளாவின் தியாகமும்

## இராமாயண வெற்றியும்




அற்புதமான காவியமான இராமாயணத்தில், மிகப்பெரிய தியாகம் செய்தவர் யார் என்று கேட்டால், பலரை, பலர் சொல்வார்கள், ஆனால் உண்மையில் அதீத தியாகம் செய்தவர், சீதையின் சகோதரியும், லட்சுமணனின் மனைவியுமான ஊர்மிளாதான்.

ராமாயணத்தில், ராமர் சீதையின் காதல் கதை அளவிற்குஇணை யான காதல் லட்சுமணன் ஊர்மிளையின் காதல் கதையாகும்.

லட்சுமணன், இராமருடன் 14 ஆண்டுகள் வனவாசம் சென்ற பின் ஊர்மிளை அரண்மனை யில் ராஜ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்ததாக நினைத்தால் அது மிகப் பெரும் தவறு.

ராமாயண போரின் வெற்றிக்கு முக்கிய காரணம் ஊர்மிளையின் தியாகம் தான்.

ஊர்மிளா சீதையின் முதல் சகோதரி ஆவார். இவர் லட்சுமணனை கண்டதும் காதல் வரவில் லை. ஆனால் தன் சகோதரியின் மீது கொண்ட அன்பினால் சீதையை பிரிய மனமில்லாமல், லட்சும ணனை திருமணம் செய்து கொள்ள சம்மதித்தார். அதன்படி லட்சும ணனை மணந்தார். அவர்களுக்கு இரண்டு மகன்கள் அங்கடா மற்றும் சந்திரகேத்து.

சீதா தனது உண்மையான சகோதரி அல்ல என்பதை அறிந்திருந் தாலும், லட்சுமன் ராமருக்கு இருந்ததைப் போலவே அளவு கடந்த பாசத்தை சீதாதேவி மீது ஊர்மிளா வைத்திருந்தால்.

அண்ணன் தம்பி பாசத்திற்கு எப்படி ராமனும் லட்சுமணனும் உதாரணமாக சொல்லப்படுகிறதோ, அக்கா தங்கை பாசத்திற்கு சீதா தேவியையும், ஊர்மிளாவையும் அவசியம் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

லட்சுமணனுடன் திருமணம் நடைபெற்ற பின்பே, லட்சுமணன், ஊர்மிளா இடையே இருவருக்குள்ளும் ஒரு அழகிய காதல் கதை ஒளிந்திருந்தது. இராமாயணத்தை சஞ்சலமற்ற மனநிலையில் படித்தால் ஊர்மிளாவின் தியாகமும், காதலும் தெரியவரும்.

ராமர் வனவாசம் செல்லும் போது அவரை விட்டு எப்பொழுதும் பிரியாத லட்சுமணன் தன் மனைவியிடம் கூட கேட்காமல் ராமனுடன் வனவாசம் செல்ல ஆயத்தமானார். லட்சுமணன் தன் முடிவை ஊர்மிளாவிடம் சொல்லத் தயங்கினார். ஏனெனில்,

சீதையைப் போல ஊர்மிளாவும் தன்னுடன் வனவாசம் கிளம்பி விட்டால் என்ன செய்வது? என்று குழம்பிப் போனார்.

ஆனால், அங்கு லட்சுமணனுக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது.

ஊர்மிளா தான் மகாராணி போல பட்டுடுத்தி நகைகளை அணிந்து கொண்டிருந்தார்.

அதனைக் கண்டு ஆத்திரம் கொண்ட லட்சுமணன், உனது சகோதரியும் அவர்களது கணவரும் வனவாசம் செல்லும்

நேரத்திலும் இப்படி அலங்கரித்துக் கொண்டு ராஜ வாழ்க்கைக்கு ஆசைப்படுகிறாய், இனி உன் முகத்தில் விழிக்க மாட்டேன்! என்று கூறி கோபத்துடன் சென்றார்.

லட்சுமணன் அங்கிருந்து சென்றவுடன், தன் திட்டம் நிறைவேறியதை எண்ணி மனதிற்குள் அழுதார் ஊர்மிளா. தன் கணவர் தன்மீது கோபத்துடன் சென்றா லும், அதைத் தான் ஊர்மிளாவும் விரும்பினார்.



கீதா-ராஜன்

காரணம், தானும் லட்சுமணனுடன் வனவாசம் சென்றாலும் அல்லது இங்கே அவரை எண்ணி வருத்தத்துடன் இருந்தாலோ, அவர் தன் கடமையை முழுமையாக செய்ய இயலாது என்பதை நன்கு அறிந்திருந்தார் ஊர்மிளா. அதனால் தான் அவர் ராஜ வாழ்க்கைக்கு ஆசைப்படுவது போல நடித்து லக்ஷ்மணனை கோபம் கொள்ள செய்தார்.

இனி வனவாசம் முடியும் வரை அவர் ஒரு நொடி கூட தன்னுடைய நினைவு இல்லாமல், அவருடைய கடமையை முழு மனதுடன் செய்வார் என நம்பினார் ஊர்மிளா.

## ஊர்மிளாவின் தியாகம்:

வனவாசத்தில் ராமர் மற்றும் சீதைக்கு பாதுகாப்பு கவசமாக லட்சுமணன் இருந்தார் என்றால். லட்சுமணனுக்கு பாதுகாப்பு அரணாய் இருந்தது ஊர்மிளாவின் பவித்திரமான அன்பு.

இரவும் பகலும் தன் அண்ணனையும் சீதையையும் காக்க எண்ணிய லட்சுமணன் தன் தூக்கத்தை 14 ஆண்டுகள் தியாகம் செய்ய முடிவு செய்தார். தூக்கத்தின் கடவுளான நித்திராதேவி அதற்கு சம்மதிக்கவில்லை.

அப்பொழுது தன் கணவரின் கடமைக்காக லட்சுமணனின் தூக்கத்தையும் சேர்த்து நான் தூங்குகிறேன் என்று நித்ரா தேவியிடம் கோரிக்கை வைத்து, அதில் வெற்றி கண்டாள் ஊர்மிளா.

தூங்குவது மிகப்பெரிய தியாகமா? என்று நினைக்கலாம். (தொடர்ந்து 3 நாட்கள் தூங்கிப் பார்த்தால் தெரியும் அதன் கொடூரம்) ஆனால், உணவின்றி 14 ஆண்டுகள் லட்சுமணனின் தூக்கத்தையும் சேர்த்து தூங்குவது சாதாரண தியாகம் அல்ல.

இதனால் ஊர்மிளாவின் ஆரோக்கியம் பெருமளவில் பாதிக்கக்கூடும் என்பதை பொருட் படுத்தாமல், தன் கணவரின் மீது கொண்ட காதலுக்காக அதனை செய்ய முன் வந்தார்.

## ஊர்மிளாவால் வெற்றி...

இலங்கையில் நடந்த போரில், இராவணனின் மகன் இந்திரஜித்தை வதைப்பது என்பது ராமருக்கே இயலாததாய் இருந்தது. காரணம், இந்திரஜித் வாங்கிய வரம் அப்படி.

“எவன் ஒருவன் 14 ஆண்டுகள் தூங்காமல் இருக்கிறானோ, அவனால் மட்டுமே தான் கொல்லப்பட வேண்டும்” என்று வரம் பெற்றிருந்தார்.

அதன்படி லட்சுமணன் தூக்கத்தையும் சேர்த்து ஊர்மிளா 14 ஆண்டுகள் தூங்கியதால் இந்திரஜித்தை கொல்லும் தகுதி பெற்ற ஒரே ஆளாக லட்சுமணன் இருந்தார்.

இந்திரஜித்தை லட்சுமணன் கொல்லாமல் விட்டிருந்தால், இராமாயணக் கதாபாத்திரங்கள் எவராலும் இந்திரஜித்தை வதம் செய்திருக்க முடியாது. ஊர்மிளாவின் தியாகத்தின் பலனை லட்சுமணன் எளிதாக அறுவடை செய்தான்.

ஊர்மிளாவின் தியாகம் இல்லை என்றால் இராமரால் போரில் வெல்வது மிகக்கடினமாய் இருந்திருக்கும்.

இராமர் விஷ்ணுவின் அவதாரம், சீதாதேவி லட்சுமியின் அவதாரம், லட்சுமணன் ஆதிசேஷனின் அவதாரம்.

இவர்கள் தங்களின் கடமையை செய்ய தியாகங்கள் செய்ததைக் காட்டிலும், மனித பிறவியான ஊர்மிளா தன் கணவரின் மீது கொண்ட காதலுக்காக செய்த தியாகம் மிகப் பெரியது.

ஊர்மிளாவின் இந்த தியாகம்தான் மொத்த இராமாயணத்திற்கும் மூல முடிச்சாக இருந்தது.

**-கீதாராஜன், சென்னை**



# சனாதன தர்மத்தை அழிக்க முடியாது

ஆன்மீக உபன்யாசகர் வேளுக்குடி உ.வே.கிருஷ்ணன் அவர்களிடம் ஒரு கேள்வி.

**கேள்வி:**

“சனாதன தர்மம் சமத்துவத் திற்கு எதிரானது” என்று ஒரு குற்றச்சாட்டை சிலர் தொடர்ந்து கூறி வருகிறார்களே?

**பதில்:**

அப்படிச் சொல்லி வருபவர் கள் சிறிய கூட்டம்; அவர்களை நாம் புறக்கணித்து விடலாம்; வக்கீல், மருத்துவர் என்றுஎந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், சிலர் தவறாக நடந்துகொள்வார்கள்; சிலர் தவறாக நடந்து கொள்வதால், அந்தத் துறையே தவறு என்று யாரும் சொல்வதில்லை.



அது போல் மதத்தலைவர்கள் ஒரு சிலர் தவறாக இருக்கலாம்; இதனால், மதத் தலைவர்களே இருக்கக் கூடாது என்று சொல்வது சரியாக இருக்காது;

சனாதன தர்மத்தைப் பற்றிக்கூறும் போது, “பெண்கள்இழிவுபடுத்தப்படுகிறார்கள். அந்தணர்களுக்கு மட்டுமே பெருமை; மற்ற வர்ணத்தவர்களுக்குப் பெருமை இல்லை; ஜாதி வேறுபாடுகள் அதிக அளவில் இருக்கிறது” என்று தொடர்ந்து சொல்லி வருகிறார்கள்:

உண்மையில் சனாதன தர்மத்தின்படி, மனைவி இல்லாமல் கணவன் எந்த ஒரு காரியத்திலும் ஈடுபடமுடியாது; 200 ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய கலாச்சாரம் மற்றும் கோட்பாடுகளை அழித்தால் மட்டுமே நம்மை அடிமைப்படுத்த முடியும் என்பதை கிறிஸ்தவ ஆங்கிலேயர்கள் புரிந்து கொண்டு, சனாதன தர்மத்தை அழிக்கும் பணியில் ஈடுபட்டார்கள்;

சனாதன தர்மம் அனைவருக்கும் தெரிவதற் குக் காரணமான நூல்களை கல்வி முறையில் இருந்து அப்புறப்படுத்தினார்கள்; கிறிஸ்தவ ஆங்கிலேயர்களின் கல்வி முறை தான் உயர்ந்தது என்று சொல்லி நம்மை நம்ப வைத்தார்கள்; நம்மை அடிமைப்படுத்துவதற்கான வழியைத் தெரிந்து கொண்டு அதை வெற்றிகர மாகச் செய்தும் காட்டினார்கள்;

இதனால் தான் நம்முடைய சனாதன தர்மத்தை பற்றி முழுவதும் தெரிந்து கொள்ளாமல், நாம் உட்பட பலரும் தவறாகப் பேச வாய்ப்பு ஏற்பட்டு விட்டது;

இந்த விஷயத்தில்,அரசியல் ரீதியாகக்குற்றச் சாட்டுகளை வைக்கும் திராவிட கட்சிகளு க்கு எதிர்வினையாற்ற முயல்கி றோமே தவிர, மக்களுக்கு உண் மை நிலையைப் புரிய வைக்க நாம் முயற்சி செய்வதில்லை;

ஒருகாலத்தில் பிராமணர்கள் சனாதன தர்மத்தைப் பற்றி மக்களிடம் சரியான முறை யில் பிரச்சாரம் செய்துவந்தார் கள்; இப்போதோ பிராமண சமு தாயத்தில் பாதிப்பேர் அமெரிக்க குடிமக்களாக மாறிவிட்டார்கள்;

மீதம் இருப்பவர்களும் சென்னை, பெங்களூரு,மும்பை போன்ற மெட்ரோசிட்டிகளில் இருக்கிறார்கள்; கிராமப்புறங் களில் போய் திராவிடக் கட்சி களின் கருத்துக்கள் தவறு என்று எடுத்துச் சொல்வதற்கான ஆட்கள் இப்போது இல்லை;

வெறும் வார்த்தைகளால் சனாதன தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வெளிநாடுகளில் இருந்தால் எந்த நன்மையும் நடக்காது. முதலில் அவர்கள் தாய் நாடு திரும்பி பிரச்சாரகர்களாக மாற வேண்டும்; இந்த மாற்றம் எல்லாம் உடனடியாக நடக்குமா என்பது தெரியாது; ஆனால், 1000 ஆண்டுகளாக, இத்தனைப் படையெடுப்பிற்குப் பிறகும் சனாதன தர்மத்திற்கு எதுவும் ஆகவில்லை. பிரச்சாரம் செய்தாலும், செய்யாவிட்டாலும் சனாதன தர்மத்தை அழிக்க முடியாது.


மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com


இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்து படிக்கலாம்

# திருக்கழுக்குன்றம்
# சங்கு பிறந்த கதையும்
# தீர்த்தகிரீஸ்வரர் ஆலய விவரமும்






செய்தி 11ம் பக்கத்தில்

இறைவனிடம் சகா வரம் பெற்ற மார்க்கண்டேயரிடம் இறைவன் ஒவ்வொரு புண்ணிய நதிகள் மற்றும் தீர்த்தங்களில் நீராடி கடைசியாக கைலாயம் வந்து அடையுமாறு கட்டளையிட்டார்.

அதன்படி ஒவ்வொரு புண்ணிய நதிகளில் நீராடி கடைசியாக திருக்கழுக்குன்றம் வந்தடைந்தார். 22 நதிகள் சங்கமிக்கும் தீர்த்தத்தில் நீடாடியபின்னர் மனம் ஒன்றினைத்து தனது கையினால் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்தார்.

பின்னர் அந்த லிங்கத்திற்கு புனித நீர் கொண்டு அபிஷேகம் செய்ய பாத்திரம் இல்லாததை அறிந்து இறைவனை வேண்டினார்.




செய்தி 11ம் பக்கத்தில்

அப்போது இனிய ஒசையுடன் குளத்திலிருந்து சங்கு ஒன்று பிறந்தது. அதனை எடுத்து சுத்தம் செய்து சங்கினால் நீரைகொண்டு இறைவனுக்கு அபிஷேகம் செய்வித்தார்.

சங்கு பிறந்ததினால் இந்தகுளம் சங்குதீர்த்த குளம் என்றும் தீர்த்தினால் அபிஷேகம் செய்வித்ததனால் இந்த ஈஸ்வரருக்கு தீர்த்த கரை ஈஸ்வரர் என்றும் பெயர் உருவானது.



வேலன்

இனி கோயினினை பற்றி பார்க்கலாம்.

சங்கு தீர்த்த குளத்தின்மேற்கு கரையில் இந்த சிவாலயம் அமைந்துள்ளது. இறைவன் மேற்கு பார்த்து அருள்பாளிக்கின்றார். 22 நதிகள் இந்த குளத்தில் சங்கமிப்பதால் இந்த ஆலயத்தில் 22 தூண்கள் அமைந்துள்ளது.








கருவரையின் வாசலின் மேல் வேதகணங்கள் சூழ கைலாய மலையின் சிவனுடன் இருப்பது போல்சிலை வடித்துள்ளார்கள் கீழே கஜலட் சுமி காட்சியளிக்கின்றார். நந்திக்கு மேல் அஷ்டதிக் பாலகர்கள் சிலை வடித்துள்ளார்கள். கருவரையை சுற்றி வருகையில் வடக்கு திசையை பார்த்தவாறு துர்கையம்மன் பிரம்மா சிலைகள்உள்ளது.

கிழக்கு திசையை பார்த்தவாறு வெங்கடா ஜலபதி சிலை உள்ளது. தெற்கு திசையை பார்த்து தட்சணமூர்த்தி சிலையும் அதனை அடுத்து செல்வவினாயகர் சிலையும் உள்ளது. தட்சணமூர்த்தி மற்றும் செல்வ வினாயகர் இடையில் கல்லில் வடிவமைக்கப்பட்ட ஜன்னல் உள்ளது.

அதில் பார்த்தால் கருவரை உள்ளே நின்ற கோலத்தில் பிரபராம்பிகை அம்மன் தெற்கு திசை பார்த்தவாறு சிலை உள்ளது. ஜன்னலுக்கு உள்ளே அம்மனை தரிசிக்குமாறு ஏன் அமைத்துள்ளார்கள் என தெரியவில்லை. இங்கு அமைந்துள்ள செல்வ வினாயகர் விஷேஷமானது. சங்கு தீர்த்த குளம் நிரம்புகையில் வினாயகரின் பாதம் வயிறு மற்றும் சிரசு என நிரம்பும் (படத்தில் உள்ளது) நிலைக்கேற்ப குளத்தில் வித்தியாசத்தினை காணலாம். வினாயகரின் சிரசு முற்றிலும் முழ்கிவிட்டால் குளம் நிரம்பி வழியும். பருவகாலத்தில் உரிய மழை பெய்தால் ஐப்பசி கார்த்திகை மார்கழி தை மாதங்களில் இங்கு அமைந்துள்ள ஈஸ்வரர் நீரில் முழ்கியவாறு இருப்பார். (10ம் பக்கத்தில் படம் உள்ளது) மீண்டும் சிவராத்திரி சமயம் நமக்கு காட்சியளிப்பார்.முன் மண்டபத்தின் மேல்கூரையில் பாம்பு சந்திரனை விழுங்குவதுபோல் அமைத்துள்ளார்கள்.






கிரகணம் முடிந்ததும் குளித்து இந்த கோயிலினை சுற்றி வந்து வணங்கினால் கிரகணத்தால் ஏற்படும் தோஷம் நம்மை ஒன்றும் செய்யாது. நிலபரப்பினை விட கோயில் தாழ அமைந்துள்ளது. படிக்கட்டுக்களில் வடக்குபக்கம் பார்த்தவாறு கருடாழ்வார் சிலையும் அதன் எதிர்பக்கத்தில் தெற்கு பக்கம் பார்த்தவாறு பட்சிகள் சிவனை வழிபடுவதுபோலவும் சிலை அமைத்துள்ளார்கள். தீர்த்தகரை ஈஸ்வரரை பார்த்தவாறு சிவன் சிலை ஒன்றும் அமைத்துள்ளார்கள்.பிரதோஷ காலங்களிலும் சிவராத்திரி சமயங்களிலும் இந்த கோயிலில் விஷேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றது.

– வேலன், போன்: 9894836096

# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்



உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

Gmail இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# மனித ஆயுளை நீட்டிக்க வைக்கும்

# நவரத்தினங்கள்




மூன்று முக்கிய சாஸ்திரங்களுள் முக்கியமானது மணிகள் பற்றியதாகும்.

ஆபத்தான காலங்களிலும் அனைத்து சமயங்களிலும் உதவுவது மணி மந்திர ஔஷதமே என்று மேலோர் குறிப்பிடுவர். மணி என்பதில் சோதிடம், வைத்தியம், வாஸ்து, எண்கணிதம், பக்தி எனப்படும் இறையருள் பெறும் துதி செய்தல் உள்ளிட்ட அனைத்துக் கலைகளும் இணைகின்றன. மினரல் எனப்படும் தாது பொருள்களை கணக்கி அடங்காத அளவில் பூமித்தாய் தந்திருக்கிறாள். அவற்றில் 300 அரிய தாதுக்களை அறிஞர்கள் இனம் கண்டுள்ளனர்; அவற்றின் அரிய பயன்களைச் சொல்லி வருகின்றனர்.

இந்த முன்னூறில் சுமார் எண்பதுக்கும் மேற்பட்டவற்றை அரிதான மணிகள் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த எண்பதில் ஒன்பது மணிகளை உலகில் உள்ள அனைத்து பழைய நாகரிகங்களும் உச்சி மேல் வைத்துக் கொண்டாடுகின்றன. ஒன்பது மணிகளை நவரத்தினங்கள் என்று சந்தோஷத்துடன் குறிப்பிடுகிறோம். ஏனையவை உபரத்தினங்கள் எனப்படும். வணிக நோக்கில் இவை ராசிக் கற்கள் என்ற பெயரைப் பெறுகின்றன.

அவையாவன :

1.மாணிக்கம், 2.முத்து, 3.பவளம், 4.மரகதம், 5.புஷ்பராகம், 6.வைரம், 7.நீலக்கல், 8.கோமேதகம், 9.வைடூரியம், கருட புராணம், சரக சம்ஹிதை, ஜோதிட சாஸ்திரம் உள்ளிட்ட நூல்கள் ஒவ்வொரு ரத்தினத்தின் பயனையும் தன்மையையும் விரிவாக விளக்குகின்றன. இவை பிரமிப்பை ஊட்டுபவை; ஏனெனில் இன்று அறிவியல் பல நவீன சாதனங்களின் உதவியால் கூறுபவற்றை அவை தீர்க்கமாக துல்லியமாகப் பல்லாண்டுகளுக்கு முன்பே குறிப்பிட்டிருப்பதால் தான் இந்த பிரமிப்பு.

ஆயுள் நீட்டிக்க ரத்தினக் கற்களை அணிக என்று ஆணையிடுகிறார் சரகர். தேர்ந்த மருத்துவரான இவர் நூறு வயது வாழ்வதற்கான வழிகளைத் தெள்ளத் தெளிவாக தனது சரக சம்ஹிதை நூலில் விளக்குகிறார். அதே நூலில் வெளியில் கிளம்பும் போது ரத்தினக் கற்களைத் தொடாமல் (அணியாமல்) செல்லக் கூடாது. பெரியோர்களின் பாதங்களைத் தொடாமல் செல்லக் கூடாது.

நெய், நல்ல மங்களகரமான பொருள்கள், மலர்கள் இவற்றைத் தொடாமல் செல்லக் கூடாது. வணக்கத்திற்குரிய பெரியோர்கள், பூசிக்கப்படும் பொருள்கள் ஆகி யவை வலப்புறம் இருக்கும்படியும், சிறியவர்கள் இடப்புறம் இருக்கும் படியாகவும் உள்ள நிலையில் கிளம்ப வேண்டும். (அதாவது பூஜை செய்த பின் பெரியோர்களை வலமாகச் சுற்றிக் கிளம்ப வேண்டும்.)

இதை அடுத்து, அடுத்த சுலோகத்தில் ரத்தினக் கற்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். ரத்னக் கற்களை கைகளில் அணியாமலோ, குளிக்காமலோ சாப்பிடக் கூடாது என்று வலியுறுத்தும் அவர் மூலிகைகளை உடலிலே தரிக்குமாறும் அறிவுறுத்துகிறார். உலகில் உள்ள 750 கோடிப் பேர்களில் ஒருவர் போல ஒருவர் இல்லை. கை ரேகை தனி; கண்ணின் கரு விழித்திரை தனி. மரபணு தனி. அவர்களது ஆசையும் விருப்பமும் தேவையும்

தனித் தனி தான்! உடல் வியாதிகளும், உள்ள மகிழ்ச்சிகளும் தனித் தனி தான்!

இந்த அடிப்படையில் நவ ரத்தினங்களை அலசுவோம்:

- மாணிக்கம் உஷ்ண அலைகளை வெளிப் படுத்துகிறது. குளிர்ச்சி சம்பந்தமான வியாதி களைப் போக்க வல்லது. ரத்த சோகை, குளிர், ஜன்னி முதலானவற்றை உடனே குணப்படுத்தும்.
- முத்து மன சம்பந்தமான அனைத்து நோய் களையும் தீர்க்கும். உடலுக்குக் குளிர்ச்சி யைத் தரும்.
- பவளம் பக்கவாத நோயைக் குணப்படுத்தும். வயிறுக் கோளாறுகள், மலச்சிக்கல், நீரிழிவு நோய் ஆகியவற்றைப் போக்கும்.
- மரகதம் பில்லி சூனியத்தை நீக்கும். துர் தேவதைகளை விலகச் செய்யும்.
- புஷ்பராகம் குழந்தை இல்லையே என்ற ஏக்கத்தை நீக்கி புத்திர பாக்கியத்தைத் தரும்; மலடை நீக்கும்.
- வைரம் குடும்ப ஒற்றுமையை ஓங்கச் செய்யும். கலைகளில் வல்லவராக்கும். குறிப்பாக நாட்டியம், நடிப்பு, சினிமா துறை யில் உள்ளோர் அணிய வேண்டிய கல் இது. வாயு, பித்தம், கபம் ஆகிய மூன்றின் தோஷங்களை நீக்க வல்லது.
- நீலக்கல், ஜல நீலம் மற்றும் இந்திர நீலம் என இது இரு வகைப்படும். தோல் நோய்களைப் போக்கும். தொழு நோய் உடையவர்கள் கூட இதை அணிந்து நலம் பெறலாம்.
- கோமேதகம் பசியைத் தூண்டி ஜீரண சக்தியை அதிகரிக்கும்.
- வைடூரியம் வாழ்வில் ஏற்படும் பெருந் துன்பங் களிலிருந்து காக்க வல்லது.

இப்படிப்பட்ட ரத்தினங்களை ஜோதிட சாஸ்திரம் ஆதரிக்கிறது; அணிந்து பயன் பெறுமாறு அறிவுறுத்துகிறது. கற் களுக்கும் கிரகங்களுக்கும் உள்ள தொடர்பை ஜோதிட நூல்கள் விளக்கமாகக் கூறுகின்றன.

சூரியன்–மாணிக்கம், சந்திரன்–முத்து, செவ்வாய்–பவளம், புதன்–மரகதம், குரு–புஷ்பராகம், சுக்ரன்–வைரம், சனி–நீலக்கல், ராகு–கோமேதகம், கேது–வைடூரியம்.

ஆக நவ மணிகளும் கிரக தோஷங்களைப் போக்க வல்லவை. ரத்தினங்களைத் தேர்ந் தெடுப்பது ஒரு தனிக் கலை.

‘அறிவுறுத்தியபடி குறிப்பிட்ட கல்லை அணிந்தேன்; ஆனால் நல்லது நடக்கவில்லை; மாறாக நிலைமை மோசமானது’ என்று ஒருவர் சொன்னால் அது பொய்யாக இருக்காது. அவர் அணிந்திருந்த கல் உண்மையான, தோஷமற்ற கல்லா என்பதை ஆராய வேண்டும்.

ஆம், கற்களில் உள்ள தோஷங்கள் பல. அதுவும் இன்றைய அறிவியல் உலகில் செயற் கையாகச் செய்யப்படும் “கற்களை” அதிகப் பணம் கொடுத்து வாங்கி அணிந்து பயன் இல் லாதது மட்டுமன்றி இன்னும் அதிகக் கெடுதல் ஏற்பட்டால் மனம் நோவது இயற்கை தானே.

மாணிக்கத்திற்கு ஆங்கிலத்தில் ரூபி (RUBY) என்று பெயர். மாணிக்கம் சிவப்பு நிறமுடைய, பூமியில் விளையக்கூடிய ஒரு கல்லாகும். ரோஸ் கலந்த சிப்பு நிறமுடையதாகவும் அல்லது சுத்த சிவப்பு நிறமுடையதாகவும் விளங்கும் இக்கற்கள் ஒளி ஊடுருவக் கூடியதாகவும், ஒளி ஊடுருவ இயலாத கல்லாகவும் இரு வகையாக கிடைகிறது. வெல்வெட் போன்ற



தன்மையும் வைரத்திற்கு அடுத்த கடினத் தன்மையையும் கொண்டது மாணிக்கக் கல்லாகும்.

மாணிக்கம் மிகுந்த உயர்தரமானது. கிடைப்பது அரிதாக இருப்பதால், இதுதான் விலைஎன்று நிர்ணயிக்க முடிவதில்லை.இதனால் மாணிக்கத்தை விலையில்லா மாணிக்கம் என்கிறார்கள். மாணிக்கத்தை கேரட் முறையில்தான் மதிப்பீடு செய்கிறார்கள். உண்மையானஉயர்ந்த வகை மாணிக்கக் கற்கள் வைரத்தை விடவும் விலை உயர்ந்ததாகும். மாணிக்கம் பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் கிடைக்கின்றன.



ஆர். சதீஷ்,

உயர்தர மாணிக்கங்கள் சாதார வெளிச்சத்தில் ஒரு சிகப்பு நிறத்தையும், அதிக வெளிச்சத்தில் நல்ல ஜொலிக்கும் சிகப்பையும் காட்டும். இந்தியாவில் தரம் குறைந்த ரூபிகளும், மற்றும் நல்ல அரிய வகையுள்ள ரூபிகளும் கிடைக்கின்றது. தரம் குறைந்த ரூபிகளுக்கு மைசூர் ரூபி என்று பெயர். இதில் ஒளியோ கவர்ச்சியோ இருக்காது. நேராக பூமியிலிருந்து கிடைக்கும் எந்தவொரு ரத்தினமும் ஒழுங்கற்றதாகத்தான் இருக்கும். அவற்றை சரியான முறையில் பட்டை தீட்டி பாலிஷ் செய்தால் மட்டுமே கற்களுக்கு அழகும் கவர்ச்சியும் உண்டாகும்.

மாணிக்கம் அலுமியம் டிரை ஆக்ஸைடு என்ற வேதிப்பொருளால் ஆனது. கொராண்டம் என்கிற வகையைச் சேர்ந்த மாணிக்கம் புறா இரத்த நிறத்தில் கிடைப்பது முதன்மை தரம் ஆகும். கரும்புள்ளிகள் உடைய மாணிக்கத்தை அணிந்தால் நிறைய பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். பலவாறு பழுதடைந்த மாணிக்கம் இறப்பைக்கூட தந்து விடும். மாணிக்கத்தை கையில் அணிந்திருக்கும் போது அதன் நிறம் மங்கினால் துன்பங்கள் ஏற்படும். அந்த துன்பம் நீங்கிவிட்டால் மாணிக்கக்கல் மீண்டும் தன்னுடைய பழைய நிறத்தை அடைந்து விடும்.

### யார் மாணிக்கக்கல் அணியலாம்?

சூரியனுடைய பிரதிநிதி கல்லாக மாணிக்கம் உபயோகப்படுகிறது. சூரியனின் வீடான சிம்ம ராசியில் பிறந்தவர்களும் சூரிய திசை நடப்பில் உள்ளவர்களும், எண் கணிதப்படி 1,10,19, 28 ம் எண்ணில் பிறந்தவர்களும் மாணிக்க கல்லை அணிந்து கொள்வது நல்லது. இதனால் சூரியனுடைய கதிர்கள் ஒழுங்கு செய்யப்பட்டு உடலில் நோய் எதிர்ப்பு சக்திகளை உருவாக்குகின்றது.

### மாணிக்கக் கல்லின் நன்மைகள்:

மருத்துவ ரீதியாக உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய்கள், காய்ச்சல், வயிற்றுக் கோளாறு, மூலம் இருதய நோய், தோல் வியாதி, கண் நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மாணிக்கக் கல்லை அணிந்தால் நோய்களின் பிடியிலிருந்து ஓரளவுக் குத் தப்பித்துக் கொள்ளலாம்.

மாணிக்கக் கல்லை தங்கத்தில் பதித்து உடலில் படும்படி அணிந்து கொண்டால் நல்ல உடல் நலம், உள்ள உறுதி நட்பு, காதல் பாசம் போன்றயாவும் சிறப்பாக அமையும். இருதயத்தையும், ரத்த ஓட்டத்தையும் வலுவடையச் செய்கிறது. மன அழுத்தம், சோகம், தேவையற்ற புலனின்ப நாட்டம் போன்றவற்றைக் குறைத்து தைரியத்தையும் வீரத்தையும் தருகிறது. மாணிக்கம் சூரியனின் ஆதிக்கம் என்பதால் பெயரையும் புகழையும் உயரத்த்துவதுடன் சமுதாயத்தில் கௌரவமிக்க பதவிகளை வகிக்கும் ஆற்றலையும் கொடுக்கிறது. மழலைச் செல்வமும் சிறப்பாக அமையும்.

ஒரு சில மாணிக்கங்களை வெட்டிப் பார்த்தால் ஆறு கீற்றுகள் உடைய நட்சத்திரத்தை பார்க்கலாம். இந்த வகை மாணிக்கக் கல்லை நட்சத்திர மாணிக்கம் என்று அழைக்கிறார்கள். மாணிக்கம் ஒரு பிரகாசமான, கடினமான, காலமெல்லாம் நிலைத் திருக்கக்கூடிய, அணியத் தகுந்த ஓர் அபூர்வ ரத்தினமாகும்.

மாணிக்கத்தை தங்கத்தில் பதித்து உடலில் படும் படியாக மோதிர விரலில் அணிந்து கொள்ள வேண்டும். அதன் எடை 3 அல்லது 5 ரத்திகள் இருப்பதே நல்லது. மிக விலை உயர்ந்த மாணிக்கக் கல்லை வாங்க இயலாதவர்கள் அதற்குப் பதிலாக கார்னட் என்ற கல்லை வாங்கி அணியலாம். குற்றமில்லாத கார்னட் கற்கள் மாணிக்கத்தை போலவே நற்பலனை அளிக்கும் தன்மை வாய்ந்த தாகும். மாணிக்கக் கல்லை அணியும்போது சூரியனுக்கு உரிய ஞாயிற்றுக் கிழமைகளில் சூரிய ஓரையில் அணிந்துகொள்வது நல்லது.

– ஆர். சதீஷ், கடலூர்
aboorvam divine centre
போன்: 9655714283

# உலகின் முதல் நூல் ரிக் வேதம்

வேதங்களை பற்றி பலர்கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். அப்பொழுதெல்லாம் வேதங் களின் கருத்துகளை நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லையே என்று வருத்தப்பட்டிருக் கிறோம். அப்படி வருந்தியவர்களில் வருத்தங்களை போக்குவது நமது கடமையாகும். எனவே நான்கு வேதங்களும் எதை பற்றி பேசுகிறது என்பதை எடுத்து சொல்வது அவசியமாகிறது. அதனால் இந்த அத்யாயத்தில் ரிக் வேதத்தின் முழுமையான வடிவத்தை சுருக்கி காட்டுவது மிகவும் முக்கியமாகும். காரணம் என்னவென்றால் வேதங்களை புரிந்து கொண்டால்தான் இந்து மதத்தை முழுமையாக அறிந்து கொள்ள முடியும்.

வேதங்களில் முதன்மையானது ரிக் வேதம் ஆகும். இது மட்டும் இந்த வேதத்திற்கு தனிப்பட்ட பெருமை அல்ல. மனித சிந்தனையானது நூல் வடிவாக முதன்முதலில் கொண்டு வரப்பட்டது இந்த வேதத்தின் மூலமாகத்தான் அதாவது உலகின் முதல் நூல் ரிக் வேதம் தான்.

நான்கு வேதங்களிலும் உள்ள மொத்த பாடல்களின் எண்ணிக்கை 1,82,211ஆகும். இதில் 1,52,222 பாடல்கள் ரிக் வேதத்திலேயே இருக்கிறது அதாவது நான்கு வேதங்களில் முக்கால் பங்கு பாடல்கள் ரிக் வேதத்திற்கு சொந்தமாகும். இந்த வேதம் பத்து மண்டலங்களாக அதாவது பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த பத்து பாகங்களும் 1028 சூத்தகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சூத்தகமும் தனிதனியான விஷயங் களை எடுத்து சிறப்பாக பேசுகிறது. ரிக் வேதம் தனிமனிதனாலோ குழுக்களாகலோ உருவாக்கப்பட்டது அல்ல. சிந்து நதி தொடங்கி கங்கை நதி வரையிலும் பரவி கிடந்த பல ஞான புருஷர்களால் கண்டறியப்பட்டு பல தலை முறைகளால் உருவாக்கப் பட்டதே ஆகும். ரிக் வேதத் தில் முதல் பாகத்தையும் கடைசி பாகமான பத்தாவது பாகத்தையும் உருவாக்கியது யார்என்று இதுவரை தெரியவில்லை. மற்ற எட்டு பாகத் தையும் உருவாக்கியவர்களைநம் மால் அறிந்து கொள்ளமுடிகிறது. இரண்டாவது பாகத்தைகிறிதமாகவும் அவரது சீடர் களும் உருவாக்கியிருக்கிறார்கள். மூன் றாவது பாகத்தை விஸ்வாமித்திரரும், நான்காவது பாகத்தை வாமதேவரும் ஐந்தாவது பாகத்தை அந்திரியும், ஆறா வது பாகத்தை பரத்வாஜரும், ஏழாவது பாகத்தை வஸிஷ்டரும், எட்டாவது பாகத்தை ஆங்கிரகரும், ஒன்பதாவது பாகத்தை கன்வரும் கண்டறிந்து வெளிபடுத்தியதாக கருதப்படுகிறது.

**கடவுள் உருவாக்கிய மதம்**




லட்சத்திற்கு மேல் பாடல்கள் ரிக் வேதத்தில் இருந்தாலும் அவைகள் சமயப் பாடல்கள், வாழ்க்கை பாடல்கள், தத்துவப் பாடல்கள் என்று

www.aanmeegamalar.com

மூன்று வகையாக பிரித்துவிடலாம். இருப்பினும் இந்த பாடல்களில் வழிபாட்டு பாடல்களான சமய பாடல்கள் தான் அதிகமாக இருக்கிறது உடம்பும் மனதும் தனிதனியானவைகள் அல்ல. ஒன்றாகவே ஆனது என்று ஆதிமனிதர்கள் நம்பினார்கள். வாழ்வில் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையை கண்டறிந்த பிறகு பண்பட்ட சிந்தனை வளர்ச்சி அதிகரித்த பிறகு உடல் வேறு உள்ளம் வேறு என்ற தெளிவை பெற்றார்கள். இந்த தெளிவான அறிவு மக்களிடம் எப்படி இருந்தது என்பதை ரிக் வேத தத்துவப் பாடல்கள் தெளிவுபடுத்துகிறது. அலை வீசும் கடலுக்கடியில் சில முத்துக்கள் தான் கிடைக்கும் என்பதை போல் சமயப் பாடல்கள் என்ற அலைகளுக்கிடையில் தத்துவப்பாடல்கள் என்ற சில முத்துக்கள் தான் ரிக் வேதத்தில் பின்னிக் கொண்டிருக்கின்றன.



யோகி ஸ்ரீ
ராமானந்த குரு

இனி ரிக் வேதத்தின் ராஜபாட்டைக்குள் பிரவேசித்து வேதக் கருத்துகளை தரிசனம் செய்வோம். மனிதன் என்பவன் யார் என்ற கேள்வியை ரிக்வேதம் முன் வைத்து மனிதன் உயிர், உடம்பு, ஆத்மா ஆகிய மூன்றின் கலவை என்ற பதிலை தருகிறது. இந்த மூன்றும் இல்லாத மனிதனை கற்பனையில் கூட பார்க்க முடியாதல்லவா. உயிர் தன்னை வெளிப்படுத்த உடம்பு என்பது அவசியம் அந்த உடம்பில் தான் ஆத்மா கொலுவிருக்க முடியும். அழகிய இந்த மூன்றையும் மனிதனுக்கு கொடுப்பது யார்?

அழகான சரீரம் அமைய கருமுட்டையை கொடுப்பவள் தாய். அந்த சரீரம் உருவாக விந்துவான உயிரைக் கொடுப்பவன் தகப்பன். உயிரையும் உடலையும் இயக்கும் சக்தியாகிய ஆத்மாவை கொடுப்பவன் இறைவன். உடலும் உயிரும் தந்த தாய் தந்தையை கண்களால் காணமுடியும். அறிவுப் பொருளான ஆத்மாவை கொடுத்த இறைவனை வெறும் கண்களால் காணமுடியாது. அவனை தரிசிக்க ஞானக் கண் வேண்டும். ஞானக்கண் பெற்று இறைவனை தரிசித்து விட்டால் ஆனந்தம் என்பது அன்றாட வாழ்வின் அனுபவமாகி விடும்.

ரிக் வேதத்திற்கு சொந்தமானதை அறிய உபநிஷதம் மனிதன் என்பவன் அன்னநிலை, பிரான நிலை, மனோநிலை, விஞ்ஞான நிலை, ஆனந்த நிலை என்று ஐந்து வகையான ஆக்கப்பட்டதாக சொல்கிறது. இந்த ஐந்தில் அன்னநிலை என்பது உடம்பை குறிக்கும், பிரான நிலை உயிரை குறிக்கும், மனோ நிலை ஆத்மாவாகும், விஞ்ஞான நிலை அறிவாகிய ஞானமாகும், ஆனந்த நிலை என்பது இறைவனோடு கலப்பதால் ஏற்படும் பெருங்களிப்பாகும். இதை மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வகையிலும் நாம் எடுத்து கொள்ளலாம். அதாவது கருவிலே உருவாகிய தாய் நம்மை தகப்பனிடம் தருகிறாள். தகப்பன் ஞானம் பெறுவதற்காக நம்மை குருவிடம் அனுப்புகிறார். ஞானத்தை தரும் குருவோ நம்மை அழியாத ஆனந்தத்தை தரும் ஆண்டவனிடத்தில் கொண்டு சேர்க்கிறான். எனவே மனிதனின் இறுதி லட்சியம் இறைவனின் திருவடிகளை சேர்வதே ஆகும் என்று ரிக் வேதம் வலியுறுத்துகிறது.

ரிக் வேதத்தில் புகழ்பெற்ற புருஷசூத்தகம் பத்தாவது மண்டலத்தில் அடங்கியுள்ளது. இந்த சூத்தகத்திலுள்ள மந்திரங்கள் மிகவும் அர்த்த புஷ்டியானது ஆகும். அந்த சூத்தகத்தின் கருத்தை சுருக்கமாக விளக்கி சொல்ல முயற்சிப்போம். விராட் புருஷனான கடவுள் நாம்காணும் இடத்திலும் காணாத இடத்திலும் பரவிகிடக்கிறான். ஏனென்றால் அவனது உருவம் கண்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு பிரம்மாண்டமானது. அவனுக்கு ஆயிரம் தலைகளும் பல்லாயிரம் கைகளும் பல நூறு கோடி கால்களும் உள்ளன. பூமியின் எல்லா திசைகளையும் அண்டசராசரத்தின் ஒவ்வொரு துகள்களையும் அவனது கைகள் தாங்கி கொண்டிருக்கின்றது.

இந்த சூத்தகத்தின் மூலம் கண்ணுக்கு தெரியாமல் நுணுக்கரிய நுண்ணியனாகவும் பிரமாண்டமாகவும் இருக்கும் இறைவனுக்கு மனித உடல்கள் இருப்பது போன்ற கற்பனையை வேத ரிஷி வர்ணனை தருகிறார் கடவுளை மனித வடிவாக்கியது சரிதானா முறைதானா என்ற வாதங்கள் வேத உரையாசியர்களால் இன்று வரை எழுப்பட்டு கொண்டிருக்கிறது. 33 வகையான பெயர்களைக் கொண்டு கடவுள் வர்ணனை செய்யப்பட்டாலும் வேத கால கவிஞர்களான ரிஷிகள் காட்டியது தேவதைகள் இயற்கையின் வடிவங்களாக இருக் கிறது என்பது தானே தவிர மனிதர் களாக இருப்பதாக அவர்கள் உற வில்லை.




மின்னலை ஆயுதமாகக் கொண்ட இந்திரன் தான் வேதப் பாடல்களில் முழுமுதற்கடவுளாக கருதப்படுகிறான். மக்களின் அபிமானத்திற்குரிய கடவுளாகவும் நான்கில் ஒரு பகுதி இந்திரனை பற்றி மட்டுமே பேசுகிறது அதற்கு அடுத்த படியாக அக்னியும் மூன்றாவதாக மழையை தரும் வருணனும் நான்காவதாக காற்றுக் கடவுளான வாயுவும் சூரிய சந்திரர்களும் வணங்கப்படுகிறார்கள். பருவக்காலங்களில் வரும் மந்த மாருதமும் சண்டமாருதமும் காலை பொழுதின் நாயகியான உஷாவும் கோபத்தோடு இருக்கும் ருத்திரனும், விஷ்ணுவும், அஷ்வினி தேவர்களும், பிரகஸ்பதி, பிரஜாபதி, அதிதி என்று இன்னும் பல தேவதைகளும் வேத ரிஷிகளின் பாடல்களால் ஆராதிக்கபடுகிறார்கள். இந்த பாடல்களில் எந்த தேவதையும் மனித வடிவமாக சித்தரிக்கப்படவில்லை. மாறாக புருஷ சூத்தகம் மட்டுமே கடவுளை மனித வடிவில் வர்ணனை செய்கிறது. அது ஏன்?

மிக முக்கியமாக இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இறைவனை மனித வடிவில் காட்ட முயற்சிக்கும் புருஷ சூத்தக பாடல் ரிக் வேதத்தின் கடைசி பகுதியாகத்தான் வருகிறதே தவிர முதற்பகுதியிலோ நடுப்பகுதிலோ வரவில்லை. எனவே சென்ற அத்யாயத்தில் நாம் சிந்தித்த படி பூர்வ குடிமக்கள் தான் கடவுளை மனித வடிவில் வணங்கினார்கள் அவர்களின் கொள்கைகளை பிறகு வேதங்களோடு இணைக்கப்பட்டன என்ற வாதத்திற்கு இது வலுசேர்க்கிறதல்லவா.

ரிக் வேத காலத்தில் ஜாதி பிரிவுகள்இல்லை. வர்ணம் என்ற வார்த்தை மனித நிறங்களை குறிக்க பயன்படுத்தப்பட்டதே தவிர சாதியை குறிக்க பயன்படவில்லை. வெள்ளை நிறம் கொண்டவர்கள் ஆரியர்கள் என்றும் தேவர்கள் என்றும் கருதப்பட்டார்கள். கருப்பு நிற மக்கள் தாசர்கள் என்றும் அசுரர்கள் என்றும் கருதப்பட்டார்கள். தேவாசுர யுத்தம் என்று ரிக்வேதம் பேசுவது எல்லாம் வெள்ளை நிற மக்களுக்கும் கருப்பு நிற மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட பூசல்களே ஆகும். இந்த பூசல்கள் முடிவு வெற்றி தோல்வியை தராமல் இரண்டு இனக் குழுக்களும் ஒன்றிற்குள் ஒன்று கலந்து போய் விட்டதாகவே ரிக் வேதம் கூறுகிறது.

ரிக் வேதக் கருத்துபடி பிராமணர், சத்திரியர், வைசீகர், சூத்திரர் என்னும் நான்கு வகையான மக்கள் அனைவரும் ஒரே வர்ணத்தை சேர்ந்தவர்களே அவார்கள். ஜன நெருக்கடியும் இடநெருக்கடியும் ஏற்பட்டபொழுது சமூக தேவைகளுக்காக தொழிலின் அடிப்படையில் மனிதர்கள் பிரிக் கப்பட்டார்களே தவிர அவர்களிடத்தில் ஏற்றத் தாழ்வுகள் எதுவும் கருதப்படவில்லை. அதாவது பிறப்பின் அடிப்படையில் நான்கு தொழில்களும் பிரித்து வைக்கப்படாமல் சர்வ சுதந்திரமாக யார் வேண்டுமென்றாலும் கல்வி போதிக்கும் பிராமணனாகவோ உடல் உழைப்பு செய்யும் சூத் திரனாகவோ இருக்க அனுமதிக்கபட்டார்கள் அதே நேரம் ஒரு தொழிலை செய்பவன் சாகும் வரை அதே தொழிலை தான் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் அப்போது இல்லை. சூத்திரனாக இருந்து உடல் உழைப்பு செய்யும் ஒருவன் தான் விரும்பினால் கல்வி கற்று பிராமணனாக மாறிவிடலாம்.

இந்த கருத்திற்கு வேதங்களிலேயே வலுவான ஆதாரங்கள் இருக்கிறது ரிக் வேதத்தின் இரண்டாவது மண்டலத்தை உருவாக்கிய விஷ்வா மித்திரர் மகரிஷி அடிப்படையில் கௌசீகன் என்ற சத்ரியன் ஆவான். இவர் தனது ஆர்வத்தால் தனது மக்களை காக்கும் அரசியல் தொழிலை விட்டுவிட்டு தவம் செய்து மந்திரங்களை உருவாக்கும் பிராமணனாக மாறிவிடுகிறான். வேதங்களால் இவர் சிறந்த அந்தணராகவும் போற்றப்படுகிறார். பிறப்பின் அடிப்படையில் வர்ணங்கள் உருவாக்கப்பட்டு இருந்தால் ஒரு சத் ரியன் எப்படி பிராமணனாக மாறி இருக்க முடியும்.

இன்று மற்ற சாதியினர் சமைத்த உணவை பிராமணர்கள் என்று கூறிக்கொள்ளும் ஒரு குழு வினர் சாப்பிட மறுக்கிறார்கள். நாகரீக சமூகம் வளர்ந்து விட்ட இன்றைய காலத்தில் இந்த பழக்கம் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் கூட மறைமுகமாக வலுவாக இருப்பதை பலர் அறிவார்கள்.

ஆனால் வேதகாலத்தில் உணவை தயாரிப்பதி லும் உண்பதிலும் எந்த பாகுபாடும் இருந்ததாக தெரியவில்லை. ரிக் வேதத்திலுள்ள பல பாடல்களில் சூத்திரர்கள் சமைத்த உணவை பிராமணர்கள் உண்டதற்கான பல ஆதாரங்கள் காட்டப்பட்டுள்ளன. உணவு விஷயத்தில் மட்டுமல்ல திருமண விஷயத்திலும் பாகுபாடுகள் வேதகாலத்தில் இல்லை. சத்திரிய பெண்ணை பிராமணனும், பிராமணப் பெண்ணை

சூத்திரனும் மணந்து கொண்டதாக பலத் தகவல்கள் கிடைக்கின்றன. இதை எயாதி, ருஷ்யசுருந்தர் ஆகியோர் கதைமூலம் நம்மால் அறிந்து கொள்ளமுடிகிறது.

கடவுள்தான் மனிதனை படைத்தான் என்று ரிக் வேதம் தெளிவாக எடுத்துச் சொல்கிறது. ரிக் வேதத்திலுள்ள தைந்திரிய உபநிஷதம் இதை தெளிவுபட காட்டுகிறது.

மனிதன் எங்கிருந்து வந்தான் எங்கே இருக்கிறான் இறுதியில் எங்கே போகிறான் என்பதை இந்த உபநிஷதம் ஒரு பாடல் மூலம் அழகுபட விளக்குகிறது.

பிரம்மம் என்னும் கடவுளை பற்றி அறிந்து கொள்ள ஆசைப்பட்ட பிறகு முனிவர் தமது தந்தையான வருண தேவனிடம் கேள்விகள் கேட்கிறான் அதற்கு வருணதேவன் பல பதில்களை சொல்லி கடைசியாக எதிலிருந்து எல்லாப் பொருட்களும் வெளியேறுகிறதோ எதனால் எல்லாப் பொருட்களும் காக்கப்படுகிறதோ எதில் எல்லாப் பொருட்களும் ஒரு நாள் திரும்பி வந்து அடங்குகிறதோ அதுதான் பிரம்மம் என்று வருணதேவன் குறிப்பிடுகிறான்.

இந்த சொற்றொடரில் வருகின்ற பொருள்கள் என்னபதம் மனிதன் உட்பட சகல ஜீவ ராசிகளையும் ஜடப் பொருட்களையும் குறிக்கிறது.

மனித வடிவில் இறைவனை உருவப் படுத்துவதில் ஒரு சிக்கல் இருக்கிறது. ஒரு தலையும் இரண்டு கால்களும், கைகளும் கொடுத்தால் அவனும் சாதாரண மனிதனாக கருதப்பட வாய்பிருக்கிறதே தவிர சர்வசக்தி வாய்ந்த ஆண்டவனாக கருதமுடியாது. அதனால் வேதக் கவிஞன் இறைவனுக்கு ஆயிரம் தலைகளும், ஆயிரம் கைகளும் கொடுத்து உருவகப்படுத்துகிறான்.

தன்னைக் காட்டிலும் சக்தி மிகுந்த வேறு ஒன்று இருந்தால்தான் மனிதன் அதை பயத்துடனும் வியப்புடனும் மதிப்பான். இந்தக் கருத்தை கொண்டுதான் ரிக் வேதத்தில் புருஷ சூத்தகத்தில் பிரமாண்டமான வடிவத்தை இறைவனுக்கு கொடுத்து வேதகால கவிஞன் போற்றிபாடுகிறான். அத்தகைய பிரமாண்ட வடிவுடைய ஈஸ்வரனுக்கு விராட் புருஷன் என்ற பெயரையும் சூட்டுகிறான். விராட் புருஷனை பற்றி பகவத் கீதையும் பேசுகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம். நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share

# ஆத்ம ஞானம்: மதத்தின் அடிப்படை தத்துவம்

அன்புமிக்க குருதேவர் அருளுகிறார்: “இறைவன் மிகவும் விரும்பும் ஆலயம், தனது பக்தனின் உள்முக மௌனம் மற்றும் சாந்தம் என்னும் ஆலயமாகும். இங்கேயுள்ள (கலிஃபோர்னியா, என்ஸினிடஸ்ல் முன்பிருந்த பொற்றாமரை ஆலயம்) இத்ந அழகிய ஆலயத்தில் நீங்கள் நுழையும்பொழுதெல்லாம் உங்கள் அமைதியின்மையையும் கவலைகளையும் பின்னால் விட்டுவிடுங்கள். அவற்றை நீங்கள் விடாமலிருந்தால், இறைவன் உங்களிடம் வரமுடியாது. முதலில் உங்களுக்குள்ளேயயே அழகும் அமைதியும் நிறைந்த ஓர் ஆலயத்தை நிர்மாணித்துக்கொள்ளுங்கள்; அங்கே உங்கள் ஆத்மபீடத்தில் இறைவனை நீங்கள் காண்பீர்கள்.”

“இறைவனைக் காண்பதற்கு மிகவும் தாமதமாகிவிட்டது என்று ஒருவர் சில சமயங்களில் உற்சாகக் குறைவை உணரக்கூடும். ஆனால் தாமதம் என்பது ஒருபோதும் இல்லை. பகவத் கீதை போதிப்பது என்னவென்றால் இப்பூவுலகம் பொய்யானது மற்றும் ஆத்மன் மட்டுமே மெய்யானது என்பதை ஒருவர் தன் மரணத்திற்கு முன்புள்ள கடைசி கணத்தில்கூட உணர்ந்துகொண்டால், அவர் இப்பூவுலகிலிருந்து வெளியேறியதும், இதை விட மேலான ஓர் உலகிற்குச் செல்வார். “ஓ, அர்ஜுனா! இதுதான் ஆத்மனில் நிலை நிறுத்தப்பட்ட நிலையாகும். இந்த நிலையில் நுழைகிற எவரும் ஒருபோதும் (மீண்டும்) மயங்க மாட்டார்கள். மாறுதல் நிகழும் அந்த தருணத்தில் கூட (ஸ்தூல நிலையிலிருந்து சூட்சும நிலைக்கு) ஒருவர் அந்த நிலையில் உறுதிப்பட்டிருந்தால் அவர் இறுதியான மாற்ற முடியாத இறை தொடர்பு நிலையை அடைகிறார்.” (பகவத் கீதை அத்.2 ஸ்லோகம் 7)

மேலும் அவர் தொடர்கிறார்: “இன்றோ நாளையோ நாம் ஒவ்வொருவரும் இப்பூவுலகிலிருந்து அகற்றப்பட்டுவிடுவோம். வாழ்க்கை முழுவதும் எதைப் பற்றியது என்பதை இப்பொழுதே கண்டறியுங்கள். உங்களுடைய எல்லா அனுபவங்களின் மிக உயர்ந்த நோக்கம், அவற்றின் அர்த்தத்தைத் தேடுவதற்கு உங்களைத் தூண்டுவதே. மானிட வர்க்கத்தின் இந்த ஊர்வலத்திற்கு முக்கியத்துவம் அளிக்காதீர்கள். காலம் செல்லச்செல்ல மாபெரும் பரம்பொருளின் ஓர் அங்கம்தான் நீங்கள் என்பதை இறுதியில் நீங்கள் கண்டறிந்தே ஆக வேண்டும். இறை அனுபூதியை உங்கள் குறிக்கோளாக்கிக் கொள்ளுங்கள். இறைவனைத் தேட முயலும் நன்னெறிச் செயலாகிய இந்த தர்மம், சிறிதளவே ஆனாலும்கூட கொடிய அச்சத்திலிருந்து உங்களைக் காப்பாற்றும் என மசாவதார பாபாஜி கூறியுள்ளார். (பகவத் கீதையில் அத்.2 ஸ்லோகம் 40 ல் கூறியுள்ளது) மரணம் அல்லது தோல்வி அல்லது மற்ற தாங்க முடியாத தொல்லைகளின் எதிர்பார்ப்பு மனிதனுள் மாபெரும் அச்சத்தைத எழுப்புகிறது. உங்களுக்கு உதவிக்கொள்வதற்கு நீங்களே செயலற்ற நிலையில் இருக்கும்பொழுது, உங்கள் குடும்பம் உங்களுக்கு ஏதும் செய்ய முடியாத பொழுது, வேறு எவரும் உங்கள் உதவிக்கு வர முடியாதபொழுது, உங்களது மனோநிலை அச்சமயத்தில் எப்படி இருக்கும்? இந்த நிலை ஏற்படுவதற்கு ஏன் நீங்கள் இடமளிக்க வேண்டும்? இறைவனை காணுங்கள்! அவனுள் உங்களை




www.aanmeegamalar.com

நிலைநிறுத்திக்கொள்ளுங்கள். உங்களுடன் மற்ற எவரும் இருந்ததற்கு முன்பு, உங்களுடன் இருந்தது யார்? இறைவன் மேலும் இப்பூவுலகை விட்டு நீங்கள் செல்லும் போது உங்களுடன் இருக்கப்போவது யார்? இறைவன் மட்டுமே. இப்பொழுதே அவனுடன் நீங்கள் நட்பை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால் அச்சமயம் அவனை உங்களால் அறிந்துகொள்ள முடியாது. இறைவனை நீங்கள் ஆழ்ந்து தேடினால் அவனைக் காண்பீர்கள்."



குருப்ரியா

"படைப்பில் உள்ள ஒவ்வொன்றும் உங்களை இறைவனிடமிருந்து பிரிக்க தூண்டிலாக உள்ள ஒரு தீயகவர்ச்சியே. ஆனால் எந்தப் பூவுலகக் கவர்ச்சியை விடவும் அதிகக் கவர்ச்சி படைத்தவன் இறைவன். அவனது கணநேரக் காட்சி உங்களுக்குக்கிட்டினால் கூட, இதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்; இத்துடன் அவனை நீங்கள் உள்மனப் பிரார்த்தனையாலும், தியானத்தாலும், திட சங்கல்பத்தாலும் காணமுடியும். இறைவனுடனான உங்கள் தீர்மானங்கள் உறுதியானவைகளாக இருக்கவேண்டும்; உங்களுடைய மனம் வேறு எங்காவது அலைந்துகொண்டிருக்கும்வரை, அவன் உங்களிடம் வரமாட்டான். அவன் உங்களிடம் வர விரும்புகிறான்.

ஆனால் அதற்கு நீங்கள் அனுமதிப்பதில்லை; அதற்குப் பதிலாக சிறிதளவு புலன் நுகர்ச்சியை நாடுவீர்கள் அல்லது உங்கள் நேரத்தை புத்தகங்களிலோ அல்லது மதுபான விருந்துகளிலோ செலவு செய்வீர்கள். ஆகவே இறைவன், "சரி, ஆகட்டும் என் குழந்தாய், தொடர்ந்து விளையாடு, " எனக் கூறுகிறான்.

மேலும் அவர் கூறுகிறார்: " இறைவன் எதையாவது தேடுகிறான் என்றால் அது நமது அன்பைத்தான். அவன் ஒவ்வொரு இதயத்தையும் தட்டி, தம்மிடம் வருமாறு கோருகிறான்; ஆனால் பெரும்பாலான மனிதர்கள் போக விரும்புவதில்லை. இருப்பினும் அவர்கள் தொல்லைகுள்ளாகும்பொழுதோ அல்லது நோய் வாய்ப்படும் பொழுதோ அவனை அழைப்பதற்கு விரைகிறார்கள். எவர், தாம் செல்வச் செழிப்புடனும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்பொழுது இறைவனுடன் நட்புறவு ஏற்படுத்திக்கொள்கிறாரோ அவர், இறைவனது உதவி தமக்குத் தேவைப்படும்பொழுது அவன் தன்னருகில் இருப்பதைக் காண்பார். ஆனால் அந்த உறவுமுறையை ஏற்படுத்திக்கொள்வதில் தாமதம் காட்டுபவர். தனது சோதனைகளைத் தனியாகவே, விவேகம் மற்றும் நிபந்தனையற்ற சரணாகதி மூலம் நிரந்தர நண்பனைக் காணும் வரை தனித்துப் போராட வேண்டியுள்ளது."

"இந்தப் பெருந்திரளான மனித இனத்தில் ஒரு சிலர் மட்டுமே இறைவனை ஆழ்ந்து தேடுகின்றனர். இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இப்பூவுலகு தங்களுடையது என எண்ணியவர்கள் எங்கே? அவர்கள் அனைவரும் சென்று விட்டனர். அனேகமாக, அவர்களுள் ஒரு சிலர் மட்டுமே வாழ்க்கையைப் பற்றிய உண்மையை அறிந்து, ஆத்ம ஞானம் பெற்ற இறை பக்தர்களானார்கள். இருந்தும் பின் தொடரும் ஒவ்வொரு சந்ததியும் இவ்வாழ்வு மெய்யானது என எண்ணுகிறது! நீங்கள் இங்கிருக்கும் சிறிது காலத்தில் இந்தக் காட்சியைப் பெரிதுபடுத்தி விடுகிறீர்கள். அதில் அதிகமாக ஈடுபடாதீர்கள். இறைவனை காணுங்கள்! அவன் தனது அன்பினால் நம்மை தன்னிடம் ஈர்க்க முயல்கிறான். நாம் காண விரும்பக்கூடிய சகல அதிசயங்களையும் பொருட்களின் வளர்ச்சி மற்றும் இயற்கையில் உள்ள மிகச் சரியான ஒழுங்குமுறை ஆகியவற்றின் அற்புதங்களை அவன் நமக்குக் காண்பித்துக்கொண்டிருக்கிறான். அவன் மலர்களின் நேர் பின்னே உள்ளான். அவனைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.

விஞ்ஞானியானவன் கண்மூடித்துனமான பிரார்த்தனையால் தனது கண்டுபிடிப்புகளைச் செய்யவில்லை; அவன் விஞ்ஞானத்தின் விதிகளைப் பின்பற்றினான். நீங்கள் விஞ்ஞான ரீதியான ஆன்மீக விதிகளை உண்மையான பக்தியுடன் செயல்படுத்தினால், இறைவன் தானாகவே உங்களுடன் இருப்பான்; உங்கள் பக்தியெனும் கண்களைத் திறவுங்கள்; ஏனென்றால் தொடர்ச்சியான ஆர்வம், அத்துடன்கூட ஆன்மீக விதியின் உபயோகம் ஆகியவற்றால் நீங்கள் அவனைக் காண்பீர்கள். "

ஆத்ம ஞானத்தைப்பற்றி குருதேவர் கூறுகிறார்: "ஒருவனுக்கு ஆத்ம ஞானம் கிடைத்தால் அவன் பிரபஞ்சமே அவனுக்குக் கிடைத்ததுபோலாகிவிடுகிறது. இறைவன் எங்கும் நிறைந்துள்ளான். எல்லாமே அவனாகத்தான் இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டால், பிறகு இவ்வுலகில் தெரியவேண்டியது எதுவுமில்லை."

அதற்கு பகவான் கிருஷ்ணன் பகவத் கீதையில் கூறுகிறார்:

"ஏதத்யோனீனி பூதானி
ஸர்வாணீத் யுபதாரய
அஹம் க்ருத்ஸ்னஸ்ய ஜகத; ப்ரபவ;

106 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

ப்ரளய ஸ்ததா:

"பர, அபரங்ளாகின்ற இரண்டு இயற்கை சொரூபங்களின் கூட்டுச்சேர்க்கையின் வெளிப்பாடுதான் இவ்வுலகில் உள்ள அனைத்து பொருட்களும். ஜீவன் சைதன்யமும் உபாதிகள் சடப்பொருட்களுமாகின்றன. சைதன்ய சொரூபமாகின்ற ஜீவனின் சான்னித்தியத்தால் சடப்பொருட்களாகின்ற எல்லா பொருட்களுக்கும் வீரியமும் ஒளியும் உண்டாகின்றன. இந்த இரண்டும் ஒன்று கூடும் பொழுது மட்டுமே ஒரு பொருளாக மாறுகிறது. அவை பிரியும்போது பொருள் இல்லாமலாகின்றது. ஜீவன் இறை அம்சமாகையால் அதற்கு ஒருபோதும் நாசம் ஏற்படுவதில்லை. உபாதிகள் ஜீவனின் ஸங்கல்பங்களாகையால் எப்பொழுதும் அவை இல்லாதவை.

இந்நிலையில் உபாதிகள் மூன்று காலங்களிலும் இல்லாதவையும் ஆனால் ஜீவ சான்னித்தியத்தால் நிகழ்காலத்தில் உள்ளதாகத் தோன்றப்படுகிறது, அவை அழிவுற்றதாகின்றன. ஜீவன் பிரம்மம் ஆனாலும் உபாதிசம்பந்தத்தால் கர்மங்களை செய்வதும் அனுபவிப்பதுமான உணர்வுடன் இருக்கிறது. இவை இரண்டும் ஒன்றானால் ஒரு நபராகிவிடுகிறது. உபாதி இல்லாமலானால் ஜீவன் அத்வைத் ப்ரம்மமாகிறது. எனவே காணப்படுகின்ற மற்றும் காணப்படாததுமாகின்ற இவ்வுலகம் முழுவதும் பராபரப்ரக்ருதிமயமாகிறது. இவற்றிற்கெல்லாம் மூல காரணம் ப்ரம்மம் மட்டும்தான். தங்கம் எவ்வாறு நகைகளாக மாறுகிறதோ, மண் எவ்வாறு கடம் (இசைக்கருவி) மற்றும் பாத்திரபண்டங்களாக மாறுகிறதோ அதுபோன்று சத்சித் ஆனந்தப் பிரம்மம் பல ரூபங்களாகக் காணப்படுகின்றன. எனவே ஜகத்தின் உற்பத்தியும் நிலையும் லயமும் எல்லாம் பிரம்மத்தில் தான்" (பகவத் கீதை அத் 7ஸ்லோகம் 6)

பகவத் கீதையில் கூறியுள்ளவற்றை நன்கு அறிந்து உணர்ந்துகொண்டால் இறுதியில் பிரம்மம் மட்டும்தான் நிலையாக உள்ளது என்பது புரியும். இவ்வாறு ஒருவனுக்கு இந்த ஜகதத்தைப் பற்றியும் பிரம்மத்தைப்பற்றியும் தெரிந்தால் அவன் வேறு எதையும் தேடமாட்டான். தெரியாமலிருக்கும்வரை உலகப்பொருட்களைத்தான் தேடிக்கொண் டிருப்பான். ஆத்மாவைப் பற்றிய விவேகம் வரும்போது உலகப்பொருட்களின் தேடுதல் அடங்கிவிடும். எனவே ஒரு மனிதனுக்கு என்ன முக்கியம் என்று சொன்னால் அது 'ஆத்மஞானம்' மட்டுமேயாகும். அதற்குத் தேவையானதை நாம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# சொர்ணபுரிஸ்வரரிடம் பணம் வைத்து பூஜை செய்தால்

# குபேரன் அருள்தரும் சிவன்






அழகிய ஊர்களும், அற்புதக் கோவில்களும், பரந்த வயல்களும், பசுமை நிறைந்த மரங்களும், குளிர்ந்த சோலைகளும் சூழ்ந்த சோழ தேசத்தின் அரிசொல் நதியென்னும் அரசலாற்றின் கரையில் அமைந்த அழகான ஊர்தான் அழகாபுத்தூர். முன்பு புத்தூர், திருப்புத்தூர், செருவிலிபுத்தூர், அரிசிற்கரைப்புத்தூர் போன்ற பெயர்களை கொண்ட இப்பதி மூவரால் தேவாரம் பாடப்பெற்ற பெருமையுடையது. காவிரி தென்கரையின் 66வது திருத்தலமிது.

'சங்கு சக்கரம் ஏந்திய கந்தன் இங்கு தனது துணைவியரோடு கல்யாண கோலத்தில் பரிகார நாயகனாக அருள் புரிவது அற்புதம், உண்மையானந்த முனிவரும், வாணாசுரனும் வழிபட்டு பேறுகள் பெற்ற உன்னதத் தலமிது.

இத்தலத்தில் வாழ்ந்த புகழ்த்துணை என்னும் சிவாச்சார்யார் நித்தமும் நியமப்படி இத்தல ஈசனை பூஜித்து வந்தார். ஒரு சமயம் இவூரை பஞ்சம் பிடித்து வாட்டியது. உணவு கிடைக்காமல் வருந்தி, மெலிந்தாலும் தொடர்ந்து சிவனது பூஜையை விடாது செய்தார். ஒரு தினம் பசியால் மிகவும் வாடிய அவர், அரசலாற்றிலிருந்து குடத்தில் நீர் எடுத்து வந்து, சிவனார் மீது ஊற்றிய போது, நீர்க்குடத்தை சிவலிங்கத்தின் மீது போட்டுவிட்டு மயங்கி விழுந்தார்.

இவரது கனவில் தோன்றிய சிவனார், "நீ அறியாமல் செய்த பிழைக்கு வருந்த வேண்டாம். பஞ்சம் நீங்கும்வரை நாள்தோறும் உனக்கு படிச்செலவுக்கு (தினசரி செலவுக்கு) பொற்காசு ஒன்று தருகிறேன்" எனக்கூறி மறைந்தார்.






கண்விழித்த அடியார், அரசனது அருளுக்கு பெருநன்றி கூறி, இல்லம் திரும்பினார். சிவ பெருமான் தன் ஆணைப்படியே நித்தமும் பொற்காசினை பீடத்தின் மீதுவைத்தருளினார். அதைக் கொண்டு பஞ்சம் தவிர்த்து, பரமனை பக்தியோடு பூஜை செய்து வந்தார்.

ஈசன் மீது நீங்காப் பற்று கொண்ட நாயனார், இறுதியில் சிவகதி பெற்று பிறவாநிலையை அடைந்தார். "பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்" என சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவரது உயர்ந்த சிவநேசத்தை தனது திருத்தொண்டர்த் தொகையில் அழகுற அடிக்கோடிட்டு காட்டுகின்றார்.

வருடந்தோறும் ஆவணி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தன்று புகழ்த்துணை நாயனாரின் குருபூஜை சிறப்புற அனுசரிக்கப்படுகின்றன. சேக்கிழாரும் இவரது புகழை செழிப்புறக் கூறி, இவரது பெருமைமகு பக்தியை உலகிற்கு பறை சாற்றுகின்றார்.

புங்க மரங்கள் சூழ்ந்த இப்பதி கொன்றையும் கோங்கும் நிறைந்ததென்றும், புகழ்த்துணைக்கு நித்தமும் காசு கொடுத்தருளிய இறைவன் குடிகொள்ளும் பதியென்றும், அந்தணர்கள் நாள்தோறும் நாவல் புகழ்ந்து, பூவால் பூஜிக்கும் திருத்தலம் என்றும், பலவாறு இப்பதியினை சிறப்பிக்கின்றார். சம்பந்தர்ப் பெருமான். சம்பந்தர் இப்பதியை 'புத்தூர்' என்றே அழைத்தார்.

அப்பர் இப்பதி பெருமான் தன்னை சரணடைந் தோர்க்கு மகிழ்ச்சியும் சக்தியும் அருளுபவர் என்றும், புத்தூர் புனிதர் என்றும், நிவேதனப் பொருட்களை ஏற்று மகிழ்பவரென்றும், நெகிழ்ந் துப் பாடி பரவசப்படுகின்றார்.

சுந்தரர், புகழ்த்துணை நாயனாரின் சரிதத் தினை முழுமையாக பாடியதோடு, பிரம்மனின் சிரம் கொய்தது குறித்தும், அந்தகாசுரனை அழித் தது பற்றியும், திருமால் தன் கண் மலரினைச் சாற்றி வழிபட, சிவனார் சுதர்சனச் சக்கரத்தை அளித்தார் என்றும் தெரிவிக்கின்றார்.

மயில்தோகை, ஏலக்காய், அகில் கட்டைகள் ஆகியவற்றை வாரிக்கொண்டு வரும் அரிசொல் ஆறு என்று நதியின் பெருமையும், வாழை, கரும்பு, பாக்கு, மூங்கில் போன்றவை இங்கே அதிகம் விளைவன என பதியின் வளத்தையும் செவ்வனே பாடிப் பகர்கின்றார். மேலும், இப்பதிகத் தை பாடவோ அல்லது கேட்கவோ சிவனருள் பரிபூரணமாகக் கிட்டும் என ஆணித்தரமாக கூறியுள்ளார் சுந்தரர்.

தார் சாலைக்குச் சற்றுத்தள்ளி அழகிய திருக் கோவில் அமைந்துள்ளது. மூன்று நிலைகளைக்



கொண்ட அகலமான மேற்கு முக இராஜகோபுரம் வரவேற்கிறது. உள்ளே, ஒரே ஒரு பிரகார அமைப்பு. நேராக மூடுதளத்துடன் கூடிய ஒரே மகா மண்டபத்தைக் கொண்டு சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியும், அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியும், அமையப்பெற்றுள்ளன. ஆதியில் கோச்செங்கட்சோழன் எழுப்பிய மாடக் கோவில்களில் ஒன்றாக இருந்தது. பின்னர் சிதைவுற்றது. நகரத்தாரால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பின் நாட்டுக்கோட்டை


மோ.கணேஷ்

கருவறையுள் கண்கவர் லிங்க உருவில் காட்சியளிக்கின்றார் ஸ்ரீ சொர்ண புரீஸ்வரர். சுயம்புத் திருமேனி புகழ்த்துணை நாயனாருக்குப் படிக்காசு அருளியதால் படிக்கா சளித்த பெருமான் எனவும்' போற்றப்படுகின்றார். இவரது தலைப்பகுதியில் அடிபட்டு, சில்லு உடைந் திருப்பதைக் காண்கின்றோம். புகழ்த் துணை நாயனாரின் குடம் விழுந்து ஏற்பட்ட வடு இது.

பின், தென்முகம் கொண்டிருக்கும்அம்பிகையை வணங்குகின்றோம். அழகின் அர்த்தமாய் விளங்கும் இந்த அன்னை அழ காம்பிகை என்றும், சௌவுந்தர நாயகியென்றும் ஆராதிக்கப்படுகின்றாள். சுந்தரர் இந்த அம்பிகையை மாழையொன்கண்ணி என்று போற்றுகின்றார்."

ஆலய வலம் வருகையில் முறையே அமையப் பெற்ற கோஷ்ட தெய்வங்களைக் கண்ணுற்று. கிழக்குப்புறத்தில் வீற்றருளும் துணையாளோடு கூடிய புகழ்த்துணை நாயனாரையும் கண்டு ஆனந்தம் அடைகிறோம். மேற்கு திக்கில் ராஜ கோபுர வலஇடப்புறங்களில் கணபதி மற்றும் கஜலட்சுமிக்கு தனித்தனி சந்நிதிகள் உள்ளன. தல விருட்சமாக வில்வ மரமும், தீர்த்தமாக அரசலாறு மற்றும் அமிர்த புஷ்கரணியும் திகழ் கின்றன.

இப்பதியின் பிரதான நாய கனான ஆறுமுகப் பெருமான், வடமேற்கு மூலையான வாயு மூலை யில், இந்திர மயூர வாகனத்தின் மேல் அமர்ந்து அருட்காட்சிஅளிக்கின்றார்.இவருக்கு இடப்புறம் தெய்வா னையும் வலப்புறம் வள்ளியும் வீற்றிருக்கின்றனர். கல் யாணத் திருக்கோலம். மேல் வலது கரத்தில் சக்கரமும் இடது மேல் கரத்தில் சங்கும் ஏந்தி, புதுமையாக தரிசனம் தருகின்றார். இதுபோன்ற அமைப்பு மிகவும் அரிதானது. இந்த அமைப்பினை ஸ்ரீ தத்துவநிதி என்னும் நூல் விரிவாக விளக்குகின்றது. அருணகிரிநாதரும் இப்பெருமான் புகழைப் பாடியுள்ளார்.

இவ்வாலயத்தில் தினமும் நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன. தினசரி காலை 7 மணி முதல் 12 மணி வரையும், மாலை 4 30 மணி முதல் 8 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும். அன்பர்கள் ரூபாய் நோட்டுகளை சொர்ணபுரீஸ்வரரிடம் வைத்து பூஜை செய்து, அதை எடுத்துச் சென்று வீட்டுப் பூஜையறையில் வைக்கின்றனர். அது அவர்களது வறுமையை போக்கி, செல்வச் செழிப்பினை உண்டாக்குவதாக நம்பிக்கை. அரசலாற்றில் குறித்து, இத்தலப் பெருமானை வழிபட முன் ஜென்ம கர்ம வினை களில் இருந்து விமோசனம் பெறலாம் என்கிறது தலபுராணம்.

இரண்டு மாலைகள் வாங்கிவந்து கல்யாண சண்முகருக்கு சாற்றி, அர்ச்சனை செய்து, அந்த மாலைகளில் ஒன்றை திரும்பப் பெற்று கழுத்தில் அணிந்து கொண்டு 11 முறை அவரை வலம் வந்து, மனமுருக பிரார்த்தித்தால் திருமணம் விரைவில் நடக்கும் என்பது தொன்றுதொட்டு வரும் வழக்கமாகும். பன்னிரண்டு அமாவாசை கள் இங்கு கந்தனுக்கு அர்ச்சனை செய்து வழிபட்டால் பிள்ளைப்பேறு கிட்டும். நினைத்த காரியம் நிறைவேற ஆறுமுகருக்கு பால் பாயசம் நிவேதனம் செய்து வழிபடுகின்றனர் பக்தர்கள். பில்லி சூனியம் ஏவல் மற்றும் முன் ஜென்ம பாவங்களால் கஷ்டப்பட்டுவோர் இங்கு

சண்முகருக்கு கற்கண்டும் துவரையும் படைத்து உரிய பலன் பெறுகின்றனர். கும்ப கோணம் திருவாரூர் பேருந்து சாலையில் முக் கிய நிறுத்தமாக உள்ளது அழகாபுத்தூர்.

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179



www.aanmeegamalar.com

# இறப்பிற்குபின் கர்மா, தகனம் செய்யும் கால அவகாசம்

ஒருவர் இறந்து விட்டால் அவருக்கு செய்ய வேண்டிய கர்மா மற்றும் தகனம் செய்யத் துவங்க எத்தனை மணி நேர அவஹாசம் தரப் பட்டு உள்ளது என்று கேட்டால் அதற்கான பதில் இதுதான்.

ஒருவர் இறந்து விட்டால் அவர் இறந்த அடுத்த பத்து மணி நேரத்துக்குள் தகனம் செய்து விட வேண்டும் என்றாலும் அதே சமயத்தில் தகன காரியத்தை ஒருவர் இறந்த நேரத்தில் இருந்து மூன்றரை மணி நேரத்துக்கு முன்னர் செய்து முடித்து விடக் கூடாது என்பது சாஸ்திர விதியாகும். எதற்காக பத்து மணி நேரம் மற்றும் மூன்றரை மணி நேர கால அவஹாசம் தரப்பட்டு உள்ளது?

ஒருவர் இறந்தப் பின் அவருடைய ஆத்மா உடனடியாக யம தூதர்களால் கொண்டு செல்லப்படாதாம். ஒருவரது மூச்சு நின்று விட்ட தாக சமிக்கை கிடைத்ததும் உடனடியாக யமகணங்கள் பூமிக்கு வந்து விட்டாலும் இறந்தவரது உடலில் இருந்து வெளியேறிய ஜீவனை தம்முடைய கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ள அவர்கள் கண்சிமிட்டும் நேர அளவில் காத்திருப்பார்களாம். அதன் காரணம் இறந்தவருடைய வாழ்க்கையின் கால அளவை ஆராய்ந்து பார்க்கும் சித்ரகுப்தரிடம் இருந்து அவர்களுக்கு அந்த ஆத்மாவின் காலம் முடிந்து விட்டது என்ற ஒப்புதல் கிடைக்க கண் சிமிட்டும் நேரம் ஆகுமாம்.

அவர்களுக்கு கண் சிமிட்டும் நேரம் என்பது பூமியின் கணக்கின்படி மூன்றரை மணி நேரம் என்பதினால்தான் மூன்றரை மணி நேரத்துக்கு முன்னதாக தகன காரியங்களை செய்யத் துவங்கி தகனமும் செய்து முடிக்க மாட்டார்கள், மூன்றரை மணி நேர காலம் முடியும்வரை யமகணங்கள் அந்த ஜீவனை தம் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதினால் ஏற்பட்டது இந்த விதியாம்.

இதற்கும் சில அடிப்படை காரணங்கள் உள்ளன. உலகில் பல்வேறு இடங்களில் பல சாதுக்களும் சன்யாசிகளும், சித்தர்களும், ராஜ ரிஷிகளும், முனிவர்களும், யோகக் கலையை கைக்கொண்ட ஆன்மீகவாதிகளும் சித்திகளைப் பெற்றிட மூச்சை நிறுத்தி வைத்துக் கொண்டு தபஸ்சில், சமாதி நிலையில் இருப்பார்களாம்.

அந்த நேரத்தில் அவர்கள் உடலில் இருந்து தமது ஜீவனை தாமே வெளிக் கொண்டு சென்று வான் வெளியில் மிதந்தவாறு தவ நிலையில் இருப்பார்களாம். அந்த நிலையில் அவர்கள் இறந்து விட்டதாகக் கருதி யமகணங்கள் அந்த ஆத்மாவை பிடித்துச் சென்று தவறு இழைத்து விடக் கூடாது என்பதற்காக இந்த நியதி பரப்பிரும்மனால் வைக்கப்பட்டு உள்ளதாக கூறுகிறார்கள்.

இது நடக்கக் கூடிய காரியமா என்ற சந்தேகம் எழத் தேவை இல்லை. தமது ஆத்மாவான ஜீவனை தனது உடலில் இருந்து வெளியில் வைத்துக் கொண்டு எவராலும் இருக்க முடியுமா என்பது நியாயமான கேள்வியாகப்படலாம். ஆனால் இந்த காரியத்தை நமது நாட்டிலேயே பல சித்த முனிவர்களும், மகான்களும் ஏன் மந்திரவாதிகளும் கூட செய்துள்ளார்கள் என் பது வரலாற்றுக் கதைகள் மூலம் தெரிய வரும்.

கூடு விட்டு கூடு பாய்ந்து செல்லும் கலை என்பது தனது உடலில் உள்ள ஜீவனை வெளியேற்றி தற்காலிகமாக மற்றொரு சடலத்தில் வைத்துக் கொண்டு இருப்பதாகும். இந்தக் கலை பண்டைக் காலத்தில் பல சாதுக்கள், முனிவர்கள், ரிஷி மற்றும் சித்தர்களால் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக கடைபிடிக் கப்பட்டு வந்துள்ளது.






# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










# aanmeegamalar.com

# இணையதளத்தை

# பார்க்கவும்










www.aanmeegamalar.com

# ராசி பலன்கள்

**16.05.2021 முதல்**
**31.05.2021 வரை**

ஜோதிடர் ஜெய் ஸ்ரீராம்
DME.,BA.,MA.,(ASTROLOGY)
மயிலாடுதுறை CELL
9487215736



### மேஷம் ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்.புதிய வண்டி, வாகன சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி கள் உண்டாகும். ஆன்மீக சிந்தனைகள் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களை தவிர்க்கவும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியம் மேம்படும். லாபங்கள் அதிகரிக்கும். தொழிலில் புதிய முயர்ச்சிகளை தவிர்க்கவும். பூர்வீக சொத்து பிரச்சனைகள் முடிவுக்கு வரும். சிலருக்கு இடம் வாங்கும் யோகம் உண்டாகும். வழக்குகள் முடிவுக்கு வரும். வரவேண்டிய பணம் வந்து சேரும்..

### ரிஷபம் ராசி அன்பர்களே உங்களுக்கு

பணவரவு சீராக இருக்கும். பொருளாதாரம் மேம்படும். தொழிலில் லாபங்கள் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலை மாற்றம் உண்டாகும். நீண்ட நாட்களாக திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும்.புதிய முயர்ச்சிகள் வெற்றியை தேடிதரும். காதல் விவகாரங்களில் அதிக கவணம் தேவை. பேச்சில் நிதானத்தை கடைபிடிக்கவும். தாயின் உடல்நலனில் அதிக அக்கரை செலுத்தவும். தொழிலில் புதிய மாற்றங்களை சிறிது காலம் செய்யாமலிருப்பது நன்மையை தரும்.

### மிதுனம் ராசி அன்பர்களே உங்களுக்கு

இந்த மாதம் சுப விரயங்கள் உண்டாகும். புதிய முயற்ச்சிகளில் அதிக கவனம் தேவை. அசையும் அசையா சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். குடும்பதில் ஒற்றுமை குறைவு உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை. தொழிலில் இருந்த போட்டிகள் குறையும்.ஆரோக்கியத்தில் அதிக கவணம் தேவை. பொருளாதாரம் சிறப்பாக இருக்கும்.தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை. ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும். தந்தையினுடைய சொத்துக்கள் வந்து சேரும். குழந்தைகளால் மகிழ்ச்சிகள் உண்டாகும்.

### கடகம் ராசி அன்பர்களே உங்களுக்கு

புதிய தொழில் துவங்குவதற்காககடன்கள் வாங்கநேரிடும். குழந்தைகள் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. தாயாரினுடைய அரவணைப்பு மகிழ்ச்சியை தரும். தாயினுடைய சொத்துக்கள் வந்துசேரும். உங்களுடைய முயற்சிகள் பிரம்மாண்ட வெற்றியை தேடி தரும். திருமண பேச்சுவார்தைகள் மகிழ்ச் சியை தரும். நீண்ட நாட்களாக திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். தொழிலில் இருந்த போட்டிகள் விலகும். தொழிலில் லாபங்கள் உண்டாகும்.

### சிம்மம் ராசி அன்பர்களே உங்களுக்கு

இந்த மாதம் பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும். தொழிலில் லாபம் எதிர் பார்த்த அளவில் இருக்கும். நிலுவையிலுள்ள வழக்குகள்முடி வுக்கு வரும். திருமணம் கைகூடும்.குடும்ப வாழ்க்கை சிறக்கும். சிலருக்கு வீடுகட்டும் யோகம் உண்டு. வாகன செலவுகள் அதிகரிக் கும். அசையா சொத்துக்கள் வாங்குவீர்கள். சுப விரயங்கள் உண்டாகும்.பொதுவாழ்க்கையில் இருப்பவர்கள் கவனமாக செயல்படவும்.தொழி லில் இருந்த மறைமுக எதிர்புகள் குறையும். சுப காரியங்கள் கைகூடும்.

### கன்னி ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய முயற்சிகளில் தொய்வு ஏற்ப்படும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அதிக கவணம் தேவை.உங்களுடைய குழந்தை களால் மன சஞ்சலங்கள் உண்டாகும். காதல் விவகாரங்களில் கவணமாக செயல்படவும். மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகி மறையும். தொழிலில் எதிர்பார்த

லாபம் வருவதில் சிக்கல் உண்டாகும். தெய்வ அனுகூலம் உண்டு. பூர்வீக சொத்துக்களால் பிரச்சனைகள்உண்டாகும். கவனமாக இருக்க வேண்டிய மாதமாக இந்த மாதம் அமையும். பொருளாதாரம் சீராக இருக்கும்..

## துலாம் ராசி அன்பர்களே உங்களுக்கு

பணவரவு சீராக இருக்கும். தாயாருடைய உடல்நலனில் அதிக அக்கறை தேவை.திரு மணம் கைகூடும். காதல் விவகாரங்களில் வெற்றி கிட்டும். வரவேண்டிய பணம் வந்து சேரும். தொழிலில் லாபங்கள் அதிகரிக்கும். தந்தை மூலம் ஆதாயம் உண்டாகும். திடீர் பணவரவுகள் திடீர் யோகம் உண்டாகும். குழந்தைகளால் மகிழ்ச்சிகள் உண்டாகும். குடும்பத்துடன் கோவிலுக்கு சென்று வருவீர்கள். ஆரோக்கிய குறைபாடுகள் வந்து மறையும்.பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டாகும்.தெய்வ அனுகூலம் உண்டாகும்.

## விருச்சிகம் ராசி அன்பர்களே உங்களுக்கு

நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். நிலுவையிலுள்ள வழக்குகள் முடிவுக்கு வரும். திருமண உறவில் விரிசல்கள் உண்டாகும். கூட்டுதொழிலில் லாபம் உண் டாகும். செய்தொழில் சிறக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாட்களாக திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். அசையும் அசையா சொத்துக்கள் வாங்குவீர்கள். புதிய வீடு கட்டும் யோகம் சிலருக்கு கிட்டும். தந்தையின் ஆரோக்கியதில் அதிக கவணம் தேவை.

## தனுசு ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய முயர்ச்சிகளில் வெற்றி கிடைக்கும். காதல் திருமணம் கைகூடும். தந்தை வழி சொத்துக்களால் பிரச்சனைகள் உண்டாகும். வழக்கு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். புதிய தொழில் வாய்புகள் உண்டாகும்.தொழிலில் இருந்த போட்டிகள் விலகும். திடீர் பணவரவுகள் மகிழ்ச்சியை தரும்.பணவரவுகள் சீராக இருக்கும். புதிய நட்புக்களால் நட்பு வட்டாரம் விரிவடையும். தொழில் போட்டிகள் விலகும்.மனைவி மூலம் செலவுகள் அதிகரிக்கும்.

## மகரம் ராசி அன்பர்களே உங்களுக்கு

பணவரவுகள் சீராக இருக்கும்.திருமண சுப காரியங்கள் நடைபெறும்.காதல் உண்டாகும்.




வாகனங்கள் மூலியமான செலவுகள் உண் டாகும். திடீர் அதிஷ்டம். உண்டாகும். தொழில் சிறக்கும் புதிய தொழில் வாய்ப்புகள் உண்டாகும். குடும்பத்தில் புதிய வரவுகள் உண்டாகும். குலதெய்வ அனுக்கிரகம் உண் டாகும். ஆன்மீக பயணம் சென்று வருவீர்கள். பூர்வீக சொத்துக்களால் நன்மை உண்டாகும். லாபங்கள் சற்று குறையும்.வெளிநாட்டு முயற் சிகள் வெற்றியை தரும்.

## கும்பம் ராசி அன்பர்களே உங்களுக்கு

விரயங்கள் அதிகரிக்கும். மனைவி வழி சொத்துக்களால் ஆதாயம் உண்டாகும். உங்களுடைய முயர்ச்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். புது புது தொழில் சிந் தனைகள் வெற்றியை தரும். அசையும் அசை யா சொத்துக்கள் வாங்குவீர்கள். வீடு கட்டும் யோகம் உண்டாகும். வெளியூர் பயணங்களை தவிர்துக்கொள்வது நல்லது. லாபங்கள் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நீண்ட நாட்களாக திருமணம் ஆகாதவார்களுக்கு திருமணம் கைகூடும். குழந்தை பாக்கியம் உண்டாகும். தந்தை வழி சொத்துக்களால் ஆதாயம் உண்டாகும்.

## மீனம் ராசி அன்பர்களே உங்களுக்கு

குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடை பெறும். தொழில் போட்டிகள் அதிகரிக்கும். உங்களுடைய முயர்ச்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். அசையா சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.அரசாங்க அனுகூலம் உண்டாகும். திருமண முயற் சிகளில் வெற்றி கிடைக்கும். தொழிலில் லாபம் எதிர்பார்த்த அளவில் இருக்கும்.திடீர் அதிஷ்டம் உண்டாகும். பணவரவகள் சீராக இருக்கும். மனைவியிடையே கருத்து வேறு பாடுகளை தவிர்ப்பது நல்லது.



# பெரியவாவிடம் தஞ்சமடைந்த குரங்கு

காஞ்சிமடத்தில் ஒரு நாள்மதியம்மஹாபெரியவா சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவரை யாரோ குறுகுறுவென பார்ப்பது போலிருக்க நிமிர்ந்தார். ஜன்னலைப் பிடித்தவாறே குட்டிக் குரங்கு ஒன்று நின்று இருந்தது. அதற்கு வாழைப்பழம் தருமாறு பணித்தார். ஆனால், வாங்க மறுத்துவிட்டது. அதற்கு கொஞ்சம் சாதம் கொடுக்க ஏற்பாடு செய்தார். கண் மூடி திறப்பதற்குள் வேகமாக சாப்பிட்டு விட்டு, மரத்தில் ஏறி மறைந்தது.

அதன்பிறகு, இதுவே தினமும் வாடிக்கை யாகி விட்டது. அதற்கு "கோவிந்தா' என்று பெய ரிட்டு அழைத்தார் மஹா பெரியவா.

ஒருநாள் அந்த குரங்கு நீண்டநேரமாகியும் சாப்பிட வரவில்லை. சாப்பிட மனமின்றி, மஹா பெரியவா காத்திருந்தார். அன்று, மடம் அருகில் இருந்த நாராயண அய்யர் வீட்டிற்குள் குரங்கு நுழைந்திருக்கிறது.அதைக் கவனிக்காத அய்யர், கதவைப் பூட்டி விட்டு மடத்திற்கு வந்து விட்டார்.

தான் புதிதாக வாங்கிய நிலத்தின் பத்திரத் தை, பெரியவாளிடம் கொடுத்து ஆசி பெறுவது அவரின் நோக்கம். பெரியவாளிடம் பத்திரத்தைக் கொடுப்பதற்காக பைக்குள் கையை விட்டார் நாராயண அய்யர்.

ஆனால், பத்திரத்தைக் காணவில்லை. அவர் திகைத்தார்.

""நாராயண அய்யரே! என்ன தேடறீர்.... நான் குரங்கைத் தேடறேன். நீர் பத்திரத்தைத் தேடறீரோ.... என்ற பெரியவா," "போங்கோ... போங்கோ.... ஆத்துல போய் தேடிப் பாருங்கோ.... நான் தேடுறது மட்டுமில்லாமல், நீங்க தேடுறதும் கெடைக்கும்...." என்றார்.

விறுவிறு என வீட்டுக்கு வந்த அய்யர் கத வைத் திறக்க, சரலேன குரங்கு ஒருபையுடன் ஓடுவதைக் கண்டார். அந்த பையைப் பார்த்ததும் தான், அதில் பத்திரத்தை வைத்தது நினைவிற்கு வந்தது. குரங்கைத் துரத்தியபடி அவரும் பின்தொடர்ந்தார்.

தெருவிலுள்ள எல்லாரும் வேடிக்கை பார்த்தனர்.

ஓடிய குரங்கு மடத்திற்குள் நுழைந்தது.

பெரியவா அதனிடம் அன்புடன், ""கோவிந்தா ..... உனக்கு பசிக்கலையா... எங்கே போயிட்ட...." என்று கேட்க, அய்யரும் ""ஐயோ குரங்கு ... பத்திரம்.... பத்திரம்...." என பதட்டத்துடன் ஒடி வந்தார்.

மஹா பெரியவா அவரிடம், "பயப்படாதீங்கோ.... குரங்கும் பத்திரமா இருக்கு! அதன் கையில் பத்திரமும் பத்திரமாத் தான் இருக்கு" என்று சொல்ல அங்கே ஒரே சிரிப்பு வெடி... அதன் பின், தன் முன் குரங்கு போட்ட பத்திரத்தை எடுத்த மஹா பெரியவா, அய்யரிடம் வழங்கி ஆசியளித்தார். பெரியவா சரணம்.



# ஆண்டவனுடன் இயற்கையாய் பழக பக்தி ஒன்றே உதவுகிறது

மிருகங்களைப் பழிக்காதே. அசூயை என்னும் வெறுப்பைக் கொள்ளாதே. செய்தால் ஆண்டவன் கோபிப்பான்.

❖❖❖

மனிதனே, உனது உள்ளத்தில் இருக்கும் அசுத்த எண்ணமே, சுத்த எண்ணமென்னும் காண்டாமிருகமாய் உள்ளது. அம்மிருகத்தைக் கொன்று விரட்ட சிவனும் திருமாலும் துடிக்கிறான் என்பதை அறி. கடவுளின் சகோதரர்களான மிருகங்களைத் தொட்டு விரைவில் அழியாதே.

❖❖❖




உண்ண உணவைத் தேடு. உணவிற் காகப் பொருளைத் தேடு. இதிலே அமைதி இருந்தால், சிந்தனைக்குள் சிந்தனையைத் தேடு. இல்லையேல் சிந்திக்கும் கல்வியையும் பொருளையும் தேடு.

❖❖❖

ஹோட்டல் என்னும் சிற்றுண்டிச் சாலையில் காபி, டீ, இட்லி கிடைக்கும். உனது உடலென்னும் சாப்பாடு ஹோட்டலில் மேலே சொன்ன எதுவும் கிடைக்காது. கடவுளைத் தேடினால் கடவுளே கிடைப்பான்.

❖❖❖

உனது வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தடையாய் இருப்பது உனது சொந்தக் குணமா? என்று யோசி. ஆமாம் என்றால் உடனே மாற்றிக் கொள். முன்னேறிவிடுவாய்.

❖❖❖

ஹோட்டல் என்னும் சிற்றுண்டிச் சாலையில் காபி, டீ, இட்லி கிடைக்கும். உனது உடலென்னும் சாப்பாடு ஹோட்டலில் மேலே சொன்ன எதுவும் கிடைக்காது. கடவுளைத் தேடினால் கடவுளே கிடைப்பான்.

❖❖❖

உனது வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தடையாய் இருப்பது உனது சொந்தக் குணமா? என்று யோசி. ஆமாம் என்றால் உடனே மாற்றிக் கொள். முன்னேறிவிடுவாய்.

❖❖❖

பூனையும், நாயும் மனிதனோடு பழகுவது இயற்கையாய் இருப்பதால் நாம் இதனுடன் பழகுகிறோம். நீயும் அவைகளைப் போல் ஆண்டவனுடன் இயற்கையாய் பழகு. இதற்கு பக்தி ஒன்றே உதவுகிறது. செய்.

❖❖❖

புத்தி உள்ள மனிதன் அதை உபயோகப்படுத்தினால் அவனுக்கு பொருள் உலகமும் உண்டு. அருள் உலகமும் உண்டு.

❖❖❖

நான் சொல்லும் இசைக் கருவிக்கு பெயரே கிடையாது.பெயர் வைத்தால் அதன் பெயர் அதிஅற்புதமான "சூப்பர்வாத்தியமே".

சிலர் திருவிழாக்களில் நாதஸ்வரத்தையும், பாண்டு வாத்தியத்தையும் வைக்கிறார்கள். அதுபோல பூஜை வழிபாடு இவைகளில் உனக்கு ஆத்ம சாதனையும் கிடைக்கிறது. பக்தியும் வருகிறது.

சிறிய பூனைக்குட்டிகள், சிறுவயதில் ஒன்றாகச் சேர்ந்து வாழுகின்றன. அதைப் பார்த்துக் கற்றுக்கொண்டு மனிதர்கள் அனைவரும் ஒற்றுமையாய் எப்பொழுதும் இருக்க வேண்டும்.

பக்தி மார்க்கத்தை மதிக்க பக்தி வேண்டும். அப்படிச் செய் தால் கடவுளை வழிபட கடவுள் அருள் கடவுளிடமிருந்தே கிடைக்கும்.

ஆகாயத்தில் ஆகாய விமானம் நேர்வழியாகவே பறக்கும். அதிகமான இடம் இருந்து தவறாகப் பறக்காது. இதுபோல் புத்திக்கும் பயிற்சி வேண்டும். பிறகே அது நேராக சிந்திக்கும்.

"கிரிக்கெட் மாட்ச்" என்ற விளையாட்டைத் தொடர்ந்து பார். விளையாட்டு புரிந்துவிடும். ஆண்டவனைத் தொடர்ந்து பார்.. தரிசி! பக்தி வந்துவிடும்!!

மிருகங்களுக்கு வேளா வேளைக்கு உணவு போட்டு வளர்த்து வா. தவறாமல் அவைகள் உன்னைக் கூப்பிட்டு அன்பு காட்டும்.

வாழ்க்கையில் "நீ" மணி தவறாமல் இருக்கும் பங்ச்சுவாலி டியை மிருகங்களிடமிருந்து கற்றுக் கொள்ளலாம்.

"காலை மாலை" என்ற இரண்டு வேளைகளிலும் உண்ண உணவு வேண்டும். ஆண்டவனுக்கோ தினம் தினம் ஆறு காலங்களிலும் பூஜை வேண்டும்.

கடவுளுக்குக் கால பூஜை வேண்டுமா? வேண்டாமாஎன்று பயமில்லாமல் சொல். உனது பக்தி யோக்கியதை உடனே விளங்கிவிடும்.

விதையும், பூமியும் இரண்டு. நட்டுவிட்டால் பயிர் என்ற சிந்தனையோ ஒன்று.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன் நடராஜன்**
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

# ஓடும் ரயிலை நிறுத்தி ஆங்கிலேய அதிகாரியை திகைக்கவைத்தவர் பக்தருக்கு கையில் காசி, ராமேசுவரத்தை காண்பித்த

# கட்டிக் குளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டி குளம் பகுதியில் உள்ள திருவேட்டை அய்யனார் கோவில் பூசாரியாக இருந்த குப்பமுத்து வேளார் இவருக்கு நீண்ட நாள்களாக குழந்தை இல்லாமல் இருந்தது ஒரு

நாள் குப்பமுத்து வேளாரும் மனைவி கூத்தாயி உடன் அங்கு உள்ள ராமலிங்க சுவாமி கோவிலில் நீண்ட நாள்களாக தங்களுக்கு குழந்தை இல்லததை கூறி தங்களுக்கு தெய்வ குழந்தை வேண்டும் என்று மனமுருகி வேண்டி னார். அதன் பலனாக 1858 ஆம் ஆண்டு ஆடி மாதம் பூராடம் நட்சத்திரத்தில் பூசாரி குப்பமுத்து கூத்தாயி தம்பதியர்க்கு அழகிய குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கு மாயாண்டி சுவாமி என பெயர் இட்டு வளர்த்தனர.

சாதாரண குழந்தையாக வளர்ந்த மாயாண்டி சுவாமி தன்னுடன் இருந்த தெய்வீக சக்தி வெளி உலகத்திற்கும் தந்தைக்கும் தெரிய ஆரம்பித்தது ஒரு நாள் குப்பமுத்து வேளார் தன் மகன் மாயாண்டி சுவாமியுடன் திருவேட்டை அய்யனார் கோவி லுக்கு பூஜை செய்த போது கோவில் முன்பு விளையாட சொல்லிவிட்டு பூஜை பணிகளை செய்து கெண்டு இருந்தார் அப்போது வெளியே விளையாடி கொண்டிருந்த மாயாண்டி சுவாமி கழுத்தில் நல்லபாம்பு சுற்றிக்கொண்டு இருந்தது வீதியில் சென்ற மக்கள் சிறுவன் மீது ஏறிய பாம்பை கண்டு அலரினார்கள் பூஜையை முடித்த குப்பமுத்து வேளாரும் மகன் மீது பாம்பு சுற்றியதை பார்த்து திகைத்து நின்றார் அடித்தால் கடித்து விடுமோ என்று பயந்து கூச்சல் போட்டனர் கூச்சலை கேட்டு திரும்பிய மாயாண்டி சுவாமி தன் மீது சுற்றி கொன்டிருந்த நல்லபாம்பை பார்த்து கொஞ்சம் இறங்கி போறிங்கலா நாக ராஜா என




மாயாண்டி சுவாமி சித்தர் சமாதி

www.aanmeegamalar.com





மாயாண்டி சுவாமி சித்தர் சமாதி

கூறிய உடன் இறங்கி அருகில் உள்ள புதரில் சென்று மறைந்தது.

பாம்பை கண்டு பயந்த தந்தையிடம் தினமும் என் நன்பன் நாகராஜனிடம் விளையாடிக்கொண்டு இருந்தேன் என்று சிரித்த முகத்துடன் கூறினார்.

இதை போல் மாயாண்டி சுவாமி தாயார் வீட்டிற்கு முன்னால் நெல்லை அவித்து காய போட்டு பின் காக்கைகள், குருவிகள் வராமல் நெல் கதிர்களை பார்த்துக் கொள்ளும் படி கூறி விட்டு குளத்திற்க்கு சென்று விட்டார்.

அப்போது எராளமான பறவைகள் தானியங் களை சாப்பிட்டு கொண்டு இருந்தது இதை மகிழ்ச்சியுடன் பறவைகளை விரட்டாமல் பார்த்து கொண்டு இருப்பதை தாய் கூத்தாயி மகனிடம் கோவம் அடைந்தார்.

உடன் மாயாண்டி சுவாமி பறவைகளை மயக் கம் அடைய செய்யவா என கேட்ட போது, மகன் அறியாமல் கேட்கிறான் என நினைத்து தாயார் சரி என்கிறார்.

உடனே தியான நிலையில் அமர்ந்து பறவை களை பார்த்து ஏதோ கூற பறவைகள் முழுவதும் மேலிருந்து விழ ஆரம்பித்தது. பயந்த தாயார் கூத்தாயி பறவைகளை பறக்கவிடு நான் விளை யாட்டாக கூறினேன். என்று கூறிய மறு நிமிடமே தாயின் கட்டளைபடி மாயாண்டி சுவாமி மயங்கிய பறவைகள் துள்ளி எழுந்து பறந்து சென்றது.

இப்போதும் கட்டிகுளம் மாயாண்டி சித்தரின் கருப்பனேந்தல் மடத்தில் கல்நடைகள் மேய்வதற் காக வயலும் தண்ணிர் தொட்டியும் உள்ளது. ஏராளமான பறவைகளும் வந்து செல்லுகின்றன.

இப்போதும் மடத்தில் பல இடங்களில் குருவி கூடுகளை காணலாம் மாயாண்டி சுவாமி தினமும் மதுரை மற்றும் பல்வேறு இடங்களுக்கு சென்று ரயில் மூலம் மானாமதுரைக்கு வந்து கொண்டு இருந்தார்.

அப்போது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இருந்த ஆங்கிலேய டிக்கெட் பரிசோதகர் குந்து காலிட்டு தியானத்தில் இருந்த மாயாண்டி சுவாமி யிடம் தலையில் பென்சிலால் தட்டி டிக்கெட் கேட் கிறார். கண் விழித்த மாயாண்டி சுவாமி சிரித்து விட்டு மீண்டும் தியான நிலைக்கு செல்கிறார். கோபம் அடைந்த அதிகாரி உதவியாளரை அழைத்து சிறிய ரயில் நிலையத் தில் நின்ற போது இறக்கி விடப்பட்டார்.

சிரித்த முகத்துடன் அருகில் இருந்த மரத்தின் கீழ் தியானத்தில் அமர்ந்தார். அவர் பயணம் செய்த ரயில் புறப்படவில்லை ரயில் நிலையத்தில் உள்ள பணியாளர்களும் ஏன் என்று திகைத்து கொண்டு இருந்தனர்.

பிற பெட்டிகளில் இருந்த பொது மக்கள் தியானத்தில் இருந்த மாயாண்டி சுவாமியிடம் காலில் விழுந்து ஆசிர் பெற்று சென்றனர்.




மாயாண்டி சுவாமி சித்தரின் தந்தை பூசாரியாக இருந்த கோவில், இங்குதான் சித்தர் பாம்புடன் காட்சி தந்தார்.






சித்தரால் உருவாக்கப்பட்ட சிலை

அப்போது சிலர் டிக்கெட் பரிசோதகரிடம் மகா சித்தர் மாயாண்டி சுவாமி பயணம் செய்தால்தான் ரயில் புறப்படும் என தெரிவித்தனர்.

பின் டிக்கெட் பரிசோதகர் மாயாண்டி சுவாமியிடம் மன்னிப்பு கேட்டு ரயிலில் பயணம் செய்யுமாறு கேட்டு அமர்வதற்க்கு இருக்கையும் ஏற்பாடு செய்கிறார். மாயாண்டி சுவாமி அமர்ந்த வுடன் ரயில் புறப்பட்டு மானாமதுரை செல்கிறது.

இதை அறிந்த ஏராளமன மக்கள் சுவாமியை வரவேற்க திரண்டனர். அதே ரயிலில் ஆய்வு பணிக்காக ராமேஸ்வரம் வந்த ஆங்கிலேய உயர் அதிகாரி சுவாமியின் மகிமையைக் கண்டு உங்களுக்கு என்ன வேண் டும் என கேட்க இறைவனிடம் சரணாகதி ஆகும் என்னை போன்ற சாதுகளுக்கு இலவசமாக ரயில் பயணம் செய்ய அனுமதிக்க வேண் டும் என்றார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து வாய் மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, இப்போதும் சாதாரண பெட்டிகளில் சாதுக்கள் அகோரிகள் ஒர் இடத் தில் இருந்து மற்றொறு இடம் செல்ல பயணம் செய்கின்றனர். டிக்கெட் பரிசோத கர்கள் ரயிலில் கிழே அமர்ந்து இருக்கும் காவி உடை அணிந்த முதியவர்களிடம் டிக்கெட் கேட்ப தில்லை.



அழகுராஜா

ஒருநாள் சுவாமிகள் மதுரைக்கு அருகே ஒரு சிறு கிராமத்தில் வசித்த பிராமணத்துக் தம்பதி யினரின் இல்லத்திற்குள் திடீரென நுழைந்தார். அத்தம்பதியினரிடம், “உங்களுக்குப் பத்தாவதாக ஒரு பிள்ளை பிறக்கப்போகிறது. அதற்குச் சுப்பிர மணி என்று பெயர் வை.

ஆனால் அவன் சில காலம் மட்டும் உங்களுடன் இருப்பான். பின்னர் அவனை இந்த உலகமே கொண்டாடும்” என்று ஆசி வழங்கினார். அதன் படி பிறந்த சுப்பிரமணிதான் பின்னர் சுவாமி களிடம் தீட்சை பெற்று ‘சாந்தானந்த சுவாமிகள்’ ஆனார். சேலம் புதுக் கோட்டை போன்ற இடங்களில் உள்ள ‘ஸ்கந்தாஸ்ரமம்’ அமைத்துப் பக்தர்களின் குறைகளைத் தீர்த்தார்.

ஒருமுறை சுவாமிகள் நாகப்பட்டினம் சென்றிருந்தார். சுவாமிகளைத் தரி சித்துத் திருநீறு பெறுவதற்காகப்



மாடுகள், பறவைகளுக்காக




அன்னதானக் கூடம்...

பெரும் கூட்டம் கூடியிருந்தது. அப்போது ஒரு சிறுவன் திருநீறு வாங்குவதற்காக நீட்டிய கையைத் தொட்டதும் சுவாமிகள் மகிழ்ச்சியுடன் “நீ யோகக்காரனப்பா! உன் பேச்சைக் கேட்கப் பணத்தைக் கொட்டிக் கொடுப்பார்கள்.

அதனைக் கொண்டு ஏராளமான ஆலயங் களுக்குத் திருப்பணிகள் செய்யும் யோகமும் உனக்கு இருக்கிறது” என்று கூறி ஆசிர் வதித்தார். அந்தச் சிறுவன்தான் பின் னாளில் திருமுருகக் கிருபானந்த வாரி யார் சுவாமிகள் எனப் புகழ் பெற் றார். சுவாமிகள்






கூறியபடி சுமார் நாற்பது திருத்தலங்களுக்குத் திருப்பணிகளும் செய்தார்.

மதுரை வடக்கு மாசி வீதியில் உள்ள இருளப்ப கோனாருக்கு ஜாதகம் பார்த்ததில் இளமையில் ஆயுள் முடிந்து விடும் என்று கூறி காசி ராமேஸ்வரம் சென்று வந்தால் ஆயுள் விருத்தியாகும் என ஜாதகம் ரீதியாக தெரிந்து கொண்டனர்.

பெற்றோரை விட்டு காசி ராமேஸ்வரம் செல்ல முடியாமல் மதுரை கோரிப்பளையம் வரும் மாயாண்டி சுவாமியை சந்திக்க மக்களோடு மக்களாக இருக்கிறார். அப்போது மாயாண்டி சுவாமி தனது சூட்டுகோலால் கையை நீட்டி, "இருளப்ப கோனார் இங்கே வா, என்ன அப்பு ஆயுள் விருத்தி பண்ணனுமா? உன் குடும்பம் விருத்தி ஆக வேண்டுமா?" என

கூறிய உடன், தன்னைபற்றி முன்பின் எதுவும் தெரியாமல் அழைத்த மாயாண்டி சுவாமியின் மகிமையை பார்த்து பக்தியுடன் அவரை வணங்கி சுவாமியுடன் கட்டிகுளம் கருப்பனேந்தல் மடம் வந்து சேர்கின்றனர்.

பின்பு மடத்தில் நாற்பத்து எட்டு நாட்கள் அன்ன ஆகாரமின்றி தவ சாலையில் மாயாண்டி சுவாமி தியானம் செய்தார். நாற்பத்து எட்டு நாட்களுக்கு பின்பு, இருளப்ப கோனாரைப் பார்த்து "உன் கட்டைக்கு அழிவு இல்லை உன் குடும்பம் விருத்தியாகும்" எனக் கூறி தன் உள்ளங்கையில் காசி விஸ்வநாதரையும் ராமேஸ் வரம் ராமநாதசுவாமியை காண்பித்து போய் வா என்கிறார்.

அதன் பின் தன் ஜீவ ஒடுக்கமான கட்டிகுளம் கருப்பனேந்தல் மடம் தவச் சாலைக்கு வரு வோருக்கு காசி ராமேஸ்வரம் சென்று வந்த புண்ணியம் கிடைக்கும் என்று பக்தர்களால் நம்பப்படுகிறது.

இது பற்றி மடத்தில் அன்னதானம் சேவைகளை செய்யும் பக்தர் கட்டிகுளத்தை சேர்ந்த சேகர் கூறியதாவது:–

கட்டிகுளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் ஏராளமான ஆன்மீக அற்புதங்களை நிகழ்த்தி உள்ளார். இங்கு இப்போதும் பசி என்று வருவோருக்கு அன்னதானமும் ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் அவதார விழாவும் நடை பெறுகிறது.

இப்போதும் ஏராளமான வீடுகளில் சித்தர் அனுமதியுடன் வரையப்பட்ட திருஉருவ படத் தின் முன்பு வேண்டுபவருக்கு பல்வேறு ஆன் மீக அதிசயங்களை நிகழ்த்தி வருகிறார். மாயாண்டி சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்கம் தான்பிறந்த கட்டிகுளம் கருப்பனேந்தல் மடமும் திருப்பரங்குன்றம், திருகூடல் மலை நவ திருப்பதியில் ஒன்றான ஆழ்வார் திருநகரி, மன் னார்குடி மற்றும் பர்மா ஆகிய இடங்களிள் ஜீவ ஒடுக்கமானார்.

அவர் கையினால் செய்த பள்ளிகொண்ட பெருமாள் கருப்பனேந்தல் மடத்தில் இன்றும் உள்ளது பக்தர்களின் மன குறையை முன்பே அறிந்து தீர்க்கும் மாகா சக்தியாக சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் உள்ளார் என அவர் தெரிவித்தார்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

பகுதி-04

க்ருத, த்ரேதா, துவாபர யுகங்களில் ஞானமும், பக்தியுமே முக்திக்கு சாதனமாக இருந்தது. கலியுகத்தில் நாம சங்கீர்த்தனத்துடன் கூடிய பக்தியே மோக்ஷ சாதனமாக கூறப்படுகிறது. பக்தி சாதனமே ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் ப்ரீதியானதாகும். பக்திக்கு கட்டுப்பட்டவர் ஸ்ரீஹரி. பக்தியோடு யார் அழைத்தாலும் கால தாமதமின்றி தோன்றும் தேவதையும் அவர் ஒருவரே. ஸ்ரீகிருஷ்ணரின் பாத கமலங்களை சரணடைந்தால் அனைத்து பாவங்களும், துக்கங்களும் நீங்கி மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தை அடையலாம். இதற்கு மிக சிறந்த உதாரணம் கோபிகைகள்.

ஸ்ரீமத் பாகவதம் உபநிஷத்துக்களின் சாரம். ஸ்ரீமத் பாகவதத்திலே ஒவ்வொரு வாக்கியத்திலும் வேத சாரமானது குப்தமாக உள்ளது. சகல சாஸ்த்ர சம்பன்னர், 18 புராணங்களை படைத் தவர், 4 வேதங்களை தொகுத்தவர், பகவத் கீதையை எழுதியும் மன சாந்தியற்று, ஸ்ரீமத் பாகவதம் மூலம் மன புஷ்டியும் சந்துஷ்டியும் ஸ்ரீ வேத வியாசர் அடைந்தார் என்றால் இதன் பெரு மையும் கீர்த்தியும் நமக்கு நன்கு விளங்கும்.

புண்ணிய நூலான ஸ்ரீமத் பாகவதம் பன்னி ரண்டு ஸ்கந்தங்களும், பதினெண்ணாயிரம் ஸ்லோகங்களும் கொண்ட உன்னதமானபுராணம். முக்தியை அளிக்கவல்லது. அசுவமேத யாகம் முதலான பல யாகங்களை காட்டிலும் பல கோடி மடங்கு பலன் தரக்கூடியது ஸ்ரீமத் பாகவத பாராயணம். துளசி, ப்ராஹ்மணர்கள், ஸ்ரீவிஷ்ணு, காமதேனு, துவாதசி திதி மற்றும் ஸ்ரீமத் பாகவதத்திற்கும் ஒருவித பேதமும் கிடையாது.




எல்லா நதிகளிலும் கங்கை எவ்வாறு சிறந் ததோ, கடவுள்களில் அச்யுதர் (கிருஷ்ணர்) எவ் வாறு உயர்ந்தவரோ, வைஷ்ணவர்களில் எவ்வாறு சிவன் உயர்ந்தவரோ, அதே போல எல்லா புராணங்களிலும் ஸ்ரீமத் பாகவதமே உயர்ந்ததாகும். அமிர்தக் கடலான ஸ்ரீமத் பாகவதம் கேட்கப்படாத வரை மட்டுமே, சாதுக்களின் சங்கத்தில் மற்ற புராணங்கள் பிரகாசிக்க இயலும். கலியுகத்தில் க்ருஷ்ண நாம கீர்த்தனம் ஜபிப்பவரிடம் கலி ஒருபொழுதும் செல்ல மாட்டான். கலியிடமிருந்து காத்துக்கொள்ளும் ஒரே உபாயம் ஸ்ரீ க்ருஷ்ண நாம கீர்த்தனமாகும். கிருஷ்ணனை கீர்த் தனை செய்வதால் தோஷங்களிலிருந்தும் பாபங் களிலிருந்தும் விடுபட்டு மோக்ஷத்தை அடைய முடியும்.

எந்தவொரு பக்தன் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் தாமரைத் திருவடிகளினிடத்து ஆத்மார்த்தமாக உன்னத அன்பு தொண்டில் ஈடுபட்டிருக்கிறானோ அவன் முழு முதற் கடவுளான ஸ்ரீஹரிக்கு மிகவும் ப்ரியமானவனாகிறான். மேலும் பக வான் அப்பக்தனின் இதயத்தில் அமர்ந்து அவன் விதிவசத்தினால் செய்த அனைத்து தீவி னைகளையும் அழித்து அவனை மன்னித்து அருள்கிறார்.

– மதுரை சு. ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593

# கற்பனைக்கு எட்டாத காரியங்கள் நடப்பதன் காரணம்

'ஞானிகளின் ராஜா குருமஹாராஜ் ஆகும்', என ஸந்த் துகாராம் மகாராஜ் கூறியுள்ளார். குரு என்பவர் சாக்ஷாத் ஞான கிடங்காக இருப்பவர். என்னுடைய குரு ஸந்த் பக்தராஜ் மகாராஜ் அவர்களுடன் இருக்கும்போது நான் அவரிடம் ஆன்மீகம் சம்பந்தமாக பல கேள்விகளை அவ்வப்பொழுது கேட்டு ஞானம் பெறுவேன். பிறகு குரு மறைந்த பின்பும் அவரின் அருளால் எனக்கு பல விதங்களில் ஞானம் கிடைத்து வருகிறது. இதன் முக்கிய காரணம் என்னவென்றால், 'என்னிடம் குருவானவர் 'ஆன்மீக ஆர்வம்' என்ற குணத்தை விழிப்படைய செய்துள்ளார்' என்பதே ஆகும். இதில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால் குருவானவர் மாயை சம்பந்தமான விஷயங்களைப் பற்றிய ஆர்வத்தை எதிர்பார்ப்பதில்லை மாறாக ஆன்மீக ஆர்வமே அவர் எதிர்பார்ப்பது, அதை என்னிடம் அவரே விழித்தெழ செய்தார்.

## 1. நூல்களை எழுதுதல்

### 1அ.நூல்களை எழுத ஆரம்பித்தல்

'ஸந்த் பக்தராஜ் மகாராஜ் அவர்களின் நல்வாக்கு ஒன்று, 'ஆன்மீகத்தில் ஆர்வமுள்ளரே ஞானத்திற்கு அதிகாரி.' ஆன்மீக ஆர்வத்தால் நான் அவரிடம் பல கேள்விகள் கேட்பேன். அவரின் பதில்களால் எனக்கு ஆன்மீகத்தின் பல விஷயங்கள் தெரிய வந்துள்ளன.

பிறகு ஸாதானையின் மூலமாக ஆனந்த நிலையை அனுபவிக்க ஆரம்பித்தவுடன் ஒரு நாள் நான் அவரிடம் கூறினேன், 'இனி நான் உங்களிடம் ஒரு கேள்வியும் கேட்க மாட்டேன்'. அப்பொழுது அவர் என்னை மிகவும் கோவித்துக் கொண்டார். அவரின் இந்த கோவத்தால்தான் இன்றுவரை என்னிடம் ஆன்மீக ஆர்வம் விழிப்படைந்த நிலையில் உள்ளது. ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் 'ஏன் மற்றும் எவ்வாறு' என்ற கேள்வி என் மனதில் எழும்.

அந்தக் கேள்விகளுக்கான விடைகள் எனக்கு கிடைக்கும்படியான வசதியை அவரே செய்துள்ளார். இன்றுவரை என்னுடைய ஒவ்வொரு கேள்விக்குண்டான பதில் ஸனாதனின் 56 ஞானம் கிடைக்கும் ஸாதகர்கள் மூலம் சூட்சுமத்தில் உடனே கிடைத்து வருகிறது. ஞானம் கிடைக்கும் ஸாதகர்கள் தினமும் என்னுடைய 78 கேள்விகளுக்கு பதிலளித்து வருகின்றனர். இந்த ஸாதகர்களின் மூலமாக ஆன்மீகத்தில் பல்வேறு விஷயங்களைப் பற்றி 'முன்பும் இல்லை, இனியும் இல்லை' என்ற அளவிற்கு பரந்த ஆன்மீக சாஸ்திர ஞானம் ஒவ்வொரு நாளும் பக்கம் பக்கமாக கிடைத்து வருகின்றது.

## 2. ஆன்மீக ஆர்வத்தால் மனோவியாதிகள் சம்பந்தமாக ஆய்வு செய்த மனோவசிய வழிமுறை

நான் ஒரு நவீன மருத்துவர். அச்சமயம்எனக்கு உடல் வியாதிகள் சம்பந்தமான காரணங்கள் மற்றும் நிவாரணங்கள் தெரிய வந்தன. மனோதத்துவத்தைப் பற்றி பயிற்சி பெறும்போது எனக்கு வெளிமனதைப் பற்றி தெரிய வந்தது. மனோதத்துவ மருத்துவ முறைப்படி முக்கியமாக நோயாளியின் கவலை, நம்பிக்கையின்மை ஆகியவற்றை நீக்க மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அதன் மூலம் ஆளுமை குறைகள் மற்றும் அஹம்பாவம் நீங்காததால் நோயாளியின் நோய் அவ்வாறே தொடர்கிறது. பிறகு நான் ஆளுமை குறைகள் மற்றும் அஹம்பாவத்தை களைவதற்காக மனோவசிய முறைப்படி ஒரு தீர்வு கண்டேன்.

## 3. ஆன்மீக ஆர்வத்தால் ஆன்மீக உபாயங்கள் பற்றிய ஞானம் கிடைத்தல்

பின்பு ஸாதனை செய்ய ஆரம்பித்தவுடன் எனக்கு 'நோய்க்கான காரணம் வெறும் உடல் மற்றும் மனோரீதியானது அன்று, ஆன்மீக

ரீதியானது', என்பது தெரிய வந்தது. அப்பொழுது எனக்கு 'ஆளுமை குறைகள் மற்றும் அஹம் பாவத்தைக் களைதல்' பற்றிய மகத்துவம் புரிந்தது. காரணம் அவற்றைக் களைவதால் ஒருவருக்கு ஸாத்வீகத் தன்மை கிடைக்கிறது, ஸாத்வீகமாக மாறிய பின் பல மானசீக நோய்கள் தூர விலகுகின்றன. கஷ்டம் விலகவில்லை என்றால் அது ஆன்மீக காரணத்தால், அதாவது 'குண்டலினி சக்கரங்களிலுள்ள தடைகளாலும் தீய சக்திகளின் பாதிப்பாலும் ஏற்படுகிறது என்பதும் அதற்கான ஒரே தீர்வு ஆன்மீக ஸாதனை செய்வது ஒன்றே என்பதும் தெரிய வந்தது. அதன் மூலம் 44 வயதில் ஸாதனைக்கு வந்ததன் மகத்துவமும் எனக்குப் புரிந்தது மற்றும் மனோவசிய வைத்தியம் செய்வதற்கு பதிலாக நான் முழுநேர சிஷ்யனாக குருவிடம் அடைக் கலம் புகுந்தேன்.



பின்பு ஸாதனை செய்தபின் எனக்கு தீய சக்திகளின் வகைகள், அவற்றின் காரியங்கள், மனித வாழ்க்கை மற்றும் சுற்றுப்புற சூழலில் அவற்றால் ஏற்படும் பரிணாமம், அவைமனிதர் களுக்கு கஷ்டங்களைக் கொடுப்பதற் கான கார ணம் மற்றும் அந்த கஷ்டங்களின் லக்ஷணங்கள் ஆகியவற்றைப் பற்றி பயில முடிந்தது.

**4. ஆன்மீக ஆர்வத்தால் பல்வேறு விஷயங்களைப் பற்றிய ஞானம் கிடைத்தல்**

அ. 'தினப்பத்திரிக்கை' ஆரம்பிப்பது சம்பந்த மாக எந்த முன் அனுபவமும் இல்லாதபோது என் ஆன்மீக ஆர்வத்தால் ஏப்ரல் 1998ல் வாராந்திர 'ஸனாதன் பிரபாத்' பத்திரிக்கையும் ஏப்ரல் 1999ல் தினசரி வாராந்திர 'ஸனாதன் பிரபாத்' பத்திரிக்கையும் ஆரம்பிக்கப்பட்டது.

ஆ. ஆன்மீக ஆர்வத்தால் ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம் போன்ற ஆன்மீக விஷயங்களைப் பற்றிய ஞானத்துடன் கூட சித்திரக்கலை, சிற்பக்கலை, ஸங்கீதம், நாட்டியம் போன்ற பல்வேறு கலைகள் சம்பந்தமாகவும் அத் துடன் வாஸ்து சாஸ்திரம், மூலிகை செடிகளின் தோட்டம் போன்ற விஷயங்களைப் பற்றியும் ஞானம் கிடைத்து வருகிறது.

**5. ஆன்மீக ஆர்வத்தால் கிடைத்த ஞானத் தின் மூலம் பல்வேறு விஷயங்களைப் பற்றி விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி**

'ஹிந்து தர்மத்தில் நாமஜபம், யக்ஞம், உணவு, ஆடைகள், தலை அலங்காரம், ஸ்ரார்த்தம் போன் றவை மனிதர்களின் மீதும் சூழலின் மீதும் ஏற்படுத்தும் நல்ல பரிணாமம்' என்பது பற்றி ஆயிரத்திற்கும் அதிகமான விஷயங்களைப் பற்றி 'யு.டி.ஐ. (யுனிவர்சல் தெர்மோ ஸ்கானர்)', 'பிப் (பாலிகான்ட்ராஸ்ட் இன்டர்பியரன்ஸ் போட்டோ கிராபி)', 'தெர்மல் இமேஜிங்' போன்ற நவீன விஞ் ஞான உபகரணங்களைக் கொண்டும் தொழில் நுட்பத்தின் மூலமாகவும் ஆராய்ச்சி செய்து ராஷ்ட்ரீய மற்றும் உலகளாவிய மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நவீன விஞ்ஞானவாதிகள் மற்றும் புத்திவாதிகள் ஆகியோர் ஒவ்வொரு விஷயத்தையும் விஞ் ஞான ஆராய்ச்சி மூலம் யந்திரங்களின் மூலம் நிரூபித்தால்தான் சரி என நினைக்கின்றனர்.

இன்றைய காலத்தில் ரிஷி முனிவர்களின் அனுபவபூர்வமான வாக்கைக் காட்டிலும் நவீன விஞ்ஞான முறைப்படி நிரூபணம் ஆகும்

ஞானத்தைத்தான் அனைவரும் நம்புகின்றனர். அதனால் இன்றைய தலைமுறை இதன் மூலமாக ஆன்மீகத்தை நோக்கி திரும்பி ஸாதனை செய்யக்கூடிய வாய்ப்பு அதிகரிக்கிறது.

### 6.ஆன்மீக ஆர்வத்தால் கற்பனைக்கும் எட்டாத புத்திக்கு அப்பாற்பட்ட சம்பவங்களைப் புரிந்து கொள்ளவும் ஆய்வு செய்யவும் முடிகிறது

அ. ஸாதனையால் என்னுடைய உடல், நகங்கள் மற்றும் கேசம் ஆகியவற்றில் தெய்வீக மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதை உணர முடிந்தது. என்னுடைய அறையில் மற்றும் அறையிலுள்ள பொருட்களிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது தெரிய வந்தது.

ஆ.ஸனாதனின் ராம்னாதி ஆஸ்ரமத்தின் வாஸ்து மற்றும் ஆச்ரமத்திலுள்ள பல பொருட் களின் மீது தீய சக்திகளின் தாக்குதலால் கஷ்டம் தரும், மற்றும் நல்ல சக்திகளால் பல தெய்வீக மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. இவை பஞ்சமஹாபூதங்களின் நிலையில் உள்ளன.

### 7. ஆன்மீக ஆர்வத்தால் ஸூட்சும உலகம் சம்பந்தமான புதிய தகவல்களை உலகுக்கு வழங்க முடிகிறது

ஸ்தூல பஞ்சஞானேந்த்ரியங்கள், மனம் மற்றும் புத்தி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டவை ‘ஸூட்சுமம்’ ஆகும், ஆகையால் பஞ்ச ஞானேந்த்ரியங்கள், மனம் மற்றும் புத்தியை உபயோகிக்காமல் கிடைக்கும் ஞானம் ‘ஸூட்சும ஞானம்’ ஆகும். ஆன்மீகம் என்பது அதிகபட்சம் ஸூட்சுமம் சம்பந்தமான சாஸ்திரம் ஆகும். என்னிடமிருந்த ஆன்மீக ஆர்வத்தால் எனக்கு ஸூட்சும விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. அதனால் நான் ஸூட்சுமத்தில் பல்வேறு பிர யோகங்களை செய்ய கற்றுக் கொண்டேன். அதன்மூலம் ஸூட்சும உலகத்தைப் பற்றித்தெரிந்து கொள்ள முடிந்தது.

இதன் மூலமாக ஸாத்வீக ஆடைகள், உணவு, ஆபரணம், தார்மீக காரியங்கள் போன்றவை ஒருவரின் மீது ஏற்படுத்தும் நல்ல பரிணாமம் போன்று ஆயிரக் கணக்கான விஷயங்கள் சம்பந்தமாக ஸூட்சும நிலையில் செயல்பாட்டை காண்பிக்கும் 12,500க்கும் அதிக மான பரிசோதனைகள் மற்றும் சித்திரங்கள் ஆகிய நவீன விஷயங்களை மனித குலத்திற்கு தர முடிந்துள்ளது.

### 8. பராத்பர குரு டாக்டருக்கு இறைவனிடமுள்ள நன்றியுணர்வு!

மேலே குறிப்பிட்ட தகவல்கள் மூலமாக ‘ஆன்மீகம்’ என்பது வ்யஷ்டி மற்றும் ஸமஷ்டி ஸாதனை விஷயத்தில் அதாவது ஈச்வரபிராப்தி சம்பந்தமான ஒரு சாஸ்திரம் என்பதும் அது அதி உன்னத சாஸ்திரம் என்பதும் தெரிய வருகிறது. ‘ஸந்த் ரஹீம் அவர்களின் ‘ஒன்று கிடைத்தால் அனைத்தும் கிடைத்தது’, அதாவது ‘ஒன்றை சாதிக்கும்போது எல்லாவற்றையும் சாதிக்க முடிகிறது’, என்ற நல்வாக்கை நான் தினமும் அனுபவபூர்வமாக உணர்கிறேன். என்னுடைய விஷயத்தில் ‘ஒன்றை சாதிப்பது’ என்பது ‘இறைவனின் ஆசீர்வாதம்’ மற்றும் ‘அனைத்தையும் சாதித்தல்’ என்பது பல்வேறு விஷயங்கள் சம்பந்தமாக சேவை செய்ய முடிதல் மற்றும் பல விஷயங்களைப் பற்றிய தகவல்கள் ஏதும் இல்லையென்றாலும் அவை சம்பந்தமாக ஸாதகர்களுக்கு வழிகாட்டுதல் வழங்க முடிதல் ஆகும். நான் ஸாதனை செய்வதால் எனக்கு இறைவனின் ஆசீர்வாதம் கிடைக்கிறது மற்றும் ஆன்மீக ஆர்வம் இருப்பதால் எது யோக்யமானதோ அது மனதில் தோன்றுகிறது. இதன் மூலம் ‘நான் அதிக காரியங்களை செய்தேன், எனக்கு அதிக பிரசித்தி கிடைக்கப் போகிறது’ என்ற அஹம்பாவ சிந்தனை துளியும் மனதில் எழ வாய்ப்பில்லை. இதற்காக நான் இறைவனின் சரணங்களில் அனந்த கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.’

– (பராத்பர குரு) டாக்டர் ஆடவலே
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626




மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

# ஆன்மீக வழியில் அமைதி

## 18

ஆன்மீக வழியில் ஞானஅறிவின் மூலம் இழந்த நித்தியமான ஆனந்தத்தை நாம் பெறுவதற்கு முடியும். நமது அறியாமையால் இழந்த நித்தியானந்தத்தை ஞான அறிவின் மூலம் பெறுவதற்கு முடியும். நித்தியமான ஆனந்தம் என்றால் நிரந்தரமான மன அமைதி என்று பொருள் கொள்ள வேண்டும். மனஅமைதி என்றால் துன்பத்திலும் இன்பத்திலும் மனம் அலைபாயாமல், மனம் கலங்காமல் இருக்க வேண்டும். அதாவது இன்பத்தைக் கண்டவுடன் மனமும் உடலும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்காமலும், துன்பத்தைக் கண்டவுடன் மனமும் உடலும் துவண்டு விடாமல் இருப்பதும் ஆகும். அதாவது நமது மனம் தெளிந்த நீரோடை போன்று இருக்க வேண்டும். ஆன்மிகம் நமது வாழ்வை மன அமைதியை நோக்கி வழி காட்டி அழைத்து செல்கிறது.



நாம் எந்தஒருகாரியம் தொடங்கினாலும் பிரார்த்தனையுடன் தொடங்க வேண்டும். நமக்கு எந்த தெய்வம் இஷ்ட தெய்வமோ அந்த தெய்வத்தை வணங்கி பிரார்த்தனை செய்யவேண்டும். இஷ்ட தெய்வம் என்றால் என்ன? முன்னோர்கள் தெய்வங்களை வணங்குவதற்கு பல்வேறு வழிபாட்டு முறைகளை நமக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக நாம் திருசெந்தூரில் பிறந்ததில் இருந்து குடியிருந்து வருகிறோம் என்றால், அங்குள்ள முருகப்பெருமானையே வணங்கி வந்திருப்போம்.

நாம் வெளியூர்களில் எந்த ஒரு கோவிலுக்குச் சென்றாலும் நமது ஊரில் கோவில் கொண்டிருக்கும் திருச்செந்தூர் முருகப்பெருமானை அப்போது நினைக்காமல் இருக்கமாட்டோம். நமக்கு இயல்பாக இஷ்டதெய்வம் நினைவுக்கு வந்து விடும். நமக்கு துன்பம் துயரம் நேரிடும்போதெல்லாம் திருச்செந்தூர் முருகப்பெருமான் தெய்வத்தையே வணங்குவோம். அவ்வாறு வேண்டும்போது நமக்கு நேரிட்ட துன்பங்கள் விலகி விடும்போது திருசெந்தூர் முருகனையே நம்பிக்கையுடன் தொடர்ந்து வணங்கி வருவோம். எனவே நமக்கு திருச்செந்தூர் முருகப்பெருமான் இஷ்ட தெய்வம் என்று மனதில் பதிந்து விடும்.

நாம் நித்தியமான மன அமைதி கொள்ள வேண்டுமெனில், தவம் செய்வதற்கு காடு மலைகளுக்குச் செல்லவேண்டியதில்லை. மனிதரில் பெரும்பாலும் ஞானம் தவம் பக்தி என்றால் துறவு நிலை என்று தவறாக எண்ணிக்கொண்டு பயந்து ஓடிவிடுகிறார்கள். நமது பந்தபாசம், சுயநலம் மற்றும் உலக இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற மனநிலைதான் காரணம். உலகில் காணும் பொருள்கள் மூலமாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று மனதில் எண்ணுவதும் ஒரு காரணமாகும். இல்லறவாசியும் ஆன்மீக வழியில் சென்றால் நித்தியமான ஆனந்தத்தினை மகிழ்ச்சியை நாம் விரும்பும் தேடும் மன அமைதியைப் பெறலாம். அதாவது நாம் வீட்டிலிருந்தபடியே நாம் பக்தி தியானம் தவம் போன்றவற்றை கடைபிடிக்கலாம். நாம் நித்தியமான ஆனந்தத்தினை மகிழ்ச்சியை மனஅமைதியை பெறுவதற்கு வேதங்கள் இதிகாசங்கள் புராணங்கள் பக்திகதைகள், பக்திபாடல்கள் போன்றவை நமக்கு வழி காட்டுகின்றன.

மிதிலை மன்னன் ஜனகர் நாட்டை நல்லாட்சி புரிந்துகொண்டு இல்லறத்தில் இருந்துகொண்டு தாமரையிலைத் தண்ணீர்போல் இல்லறஞானியாகத்

திகழ்ந்தார் என்பதை இராமாயணம் என்னும் இதிகாசம் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. தத்துவம் என்றால் மெய்ப்பொருளை அறிந்து கொள்வது என்று அர்த்தம். அதாவது உண்மைபொருளாகிய பராமாத்மாவை அறிந்து கொள்வது ஆகும். ஒரு மனிதனிடம் மனிதத்தன்மை மிருகத் தன்மை என இரண்டு தன்மைகள் மனதில் உள்ளன. மனிதத்தன்மை ஒருவனிடம் இருந்தால்தான் இரக்கம், அன்பு கருணை போன்ற செயல்களை செய்வதற்கு மனம் இடம் கொடுக்கும் அல்லது அவனை அழைத்துச் செல்லும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மனிதனிடம் தீய எதிர்மறை எண்ணங்கள் மனதில் இருந்தால் அவன் மிருகத்தன்மை படைத்தவனாக மாறி விடுகிறான். அவனது வாக்கு மனம் செயல்கள் அனைத்திலும் தீமையே நிறைந்து காணப்படும். உயிர் இரக்கம், கருணை, அன்பு யாருடைய மனத்தில் நிறைந்து இருக்கிறதோ அவர்கள்தான் மனித தன்மையின் அடையாளங்கள் ஆகும்.

இதனைத்தான் வள்ளல்பெருமான் ‘ஜீவ காருண்ய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோல்’ என்று உயிர் இரக்கத்தின் தன்மையை முக்கியமாக வலியுறுத்திக் கூறியுள்ளார். மனிதத்தன்மை இருப்பவர்களைத்தான் இந்த உலகம் விரும்புகிறது. உயர்வாக கருதுகிறது. மனிதத்தன்மை மனிதநேயம் அன்பு நிறைந்திருக்கும் உள்ளங்கள்தான் நித்திய ஆனந்தம் மகிழ்ச்சி சுகம் போன்றவற்றுடன் அமைதியாக வாழும்.

மோட்சம் என்றால் மனநிறைவு என்று பொருள் உண்டு. நாம் உலகில் காணும் ஒரு பொருளை அடைவதற்கு ஆசைப்படுகிறோம். நாம் விரும்பிய பொருள்கள் அல்லது பதவியோ நமக்குக் கிடைத்தவுடன் ஆனந்தம் அடைகிறோம். அந்த மகிழ்ச்சி ஆனந்தம் கொஞ்ச நேரம் அல்லது சிறிது காலம்தான் நீடிக்கும். மீண்டும் ஒரு மகிழ்ச்சி இன்பம் தரக்கூடிய பொருளுக்கு அல்லது பதவிக்கு நாம் ஆசைபட்டு தாவுகிறோம். நாம் உலகில் காணும் முடிவில்லாத ஆசைகளில் தொடர்ந்து செல்கிறோம்.

உலகில் காணும் பொருள்களின் மீது விருப்பம்கொண்டு ஆசையின் வழியில் மனிதன் சென்றால் அவனுக்கு மன அமைதி என்பது கானல் நீர்தான். அதனால்தான் புத்தர் ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று மக்களுக்கு உணர்த்தினார். உலகில் காணும் பொருள்களின் மீது ஆசைகள் மனதில் இருக்கும்வரை மனிதனுக்கு மனநிறைவோ மன அமைதியோ கிடைக்காது. நமது பசியைப் போக்க உணவை உண்டு வயிற்றை எப்படி நிறைத்து நிறைத்து காலி செய்துகொண்டு இருக்கிறமோ? அதைப்போல்தான் மனிதன் உலகில் காணும் பொருள்களின் மீது ஆசைகளை மனதில் நினைத்து நினைத்து, நினைவுகளால் நிறைத்து நிறைத்து காலி செய்து கொண்டே இருக்கிறோம். நாம் இந்த இடத்தில் ஆசையுள்ள நமது மனதையும் வயிற்றையும் ஒப்பிட்டு நோக்க வேண்டும். நமது வயிற்றுப்பசிக்கு முடிவு இருக்கிறதா? அதேபோல் நமது மனதில் தோன்றும் ஆசைகளுக்கும் முடிவு இல்லை. ஆன்மீக வழியில் செல்லும்போது நமது ஆசைகளுக்கு ஒரு முடிவு கிடைக்கும். நித்தியமான மன நிறைவு அளிப்பது மோட்சம் என்று சித்தர்களும் ஞானிகளும் கூறியுள்ளனர். மனித வாழ்வில் பூர்ண திருப்தி மோட்சம் ஆகும். நம்மில் சிலரிடம் மோட்சத்திற்குப் போகிறாயா என்று



கேட்டுப்பாருங்கள். மோட்சம் என்றால் பலர் இப்போது எனக்கு வேண்டாம் என்பதுபோல் மனதில் நினைப்பார்கள். மேலும் அவர்கள் இப்போது எனக்கு மோட்சம் வேண்டாம் என்றுதான் கூறுவார்கள். அவர்களிடம் ஏன் மோட்சம் வேண்டாம் என்று கூறுகிறீர்கள் என்று கேட்டால், அவர்கள் இந்த உலக இன்பமே எனக்குப் போதும் என்றும், இங்கு நாங்கள் வாழ்கிறவரையில் உலகத்தில் உள்ள இன்பங்களை அனுபவித்து விட்டுப் போகிறோம் என்றுதான் கூறுவார்கள். மேலும் அவர்கள் ‘வெந்ததை தின்று விட்டு விதி வந்தால் இறந்து போவோம்’ என்ற மனநிலையில்தான் விரக்தியாகக் கூறுவார்கள். அவர்கள் அனுபவிக்கும் உலகத்தின் இன்பங்களில் துன்பமும் கலந்து இருக்கும், இன்பமும் துன்பமும் நிரந்தரம் இல்லை என்று அவர்களுக்குத் தெரிந்து இருந்தாலும், உணர்ந்து இருந்தாலும் மன நிறைவு அளிக்கக்கூடிய மோட்சத்தைப் பெரும்பாலும் விரும்பமாட்டார்கள்.

மோட்சம் என்றால் மன நிறைவு அல்லது பூர்ண திருப்தி. மனித வாழ்வில் வரும் இன்ப துன்பங்களினால் ஏற்படக்கூடியவைகளை அந்த இன்ப துன்பங்களை எல்லாம் உடலும் உள்ளமும் அனுபவிக்கிறது. தீதும் நன்றும் பிறர் தர வராது என்பதை உலக இன்பத்தில் மிதப்பவர்கள் யாரும் உணர்வதில்லை. மனித மனங்கள் மேலோட்டமான அல்லது மேல்மனம், உள்மனம் மற்றும் ஆழ்மனம் என மூன்று நிலைகளில் மனம் இருக்கிறது. மோட்சம் அடைவதால் மன நிறைவு கிடைக்கும் என்று மனிதனுடைய மேலோட்ட மனம், அறிந்திருந்தாலும் அதனை அது விரும்புவதில்லை ஆனால் மனிதனிடமுள்ள ஆழ்மனம் மோட்சத்தை பற்றி நன்கு உணர்ந்து கொள்கிறது.

ஆழ்மனத்திற்கும் மேலோட்டமான மனதிற்கும் என்ன வேறுபாடு அதனை எப்படி அறிந்து கொள்ளலாம் என்பதை ஒரு உதாரணம் மூலம் அறிந்து கொள்ளலாம். ஒருவர் தன்னோட மகளுக்கு திருமணம் முடிக்க வேண்டும் என்று அல்லும் பகலும் கவலைப்பட்டுக் கொண்டு முயற்சி செய்து, மகள் திருமணத்தை கடன் வாங்கி கஷ்டப்பட்டு முடித்து விடுகிறார். தன்னுடைய மகள் திருமணத்தை முடித்து விட்டோம் என்ற மனநிறைவு ஏற்பட்டு அவருடைய ஆழ்மனதில் பதிவு பெற்று மகிழ்ச்சியும் கொள்கிறார். ஆனால் அவரின் மேலோட்டமான அல்லது மேல்மனதில் மகள் வாழ்வைப் பற்றி ஒருவிதமான மன அழுத்தம் இருந்து கொண்டே இருக்கும்.

அதாவது நாம் இவ்வளவு கஷ்டப்பட்டு மகளுக்குத் திருமணம் முடித்து வைத்திருக்கிறோம்


• ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மீகமலர்.காம்




இந்த மாப்பிள்ளை 'தன்னோட மகளை மகிழ்ச்சியுடன் வைத்து காப்பாற்ற வேண்டுமே' என்ற நினைவுகள் அல்லும் பகலும் அவர் மேலோட்டமான மனதின் ஓரத்தில் சிறிது கவலையுடன் இருந்து கொண்டே இருக்கும். அதனால் அவர் மன அமைதியை இழக்க நேரிடும். அவ்வாறு அவர் தன் மகள் வாழ்வைப் பற்றி எண்ணாமல் ,ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்க்கும்போது தனது மகளுடைய வாழ்வு மகிழ்ச்சியாக இருக்கும் என்று நேர்மறை எண்ணத்துடன் மனதில் நம்பிக்கை கொள்ளும்போது, அவருக்கு மகள் வாழ்வு பற்றிய மனக்குழப்பம் நீங்கி தெளிவு பெற்று மன அமைதி கொள்கிறார்.

தத்துவம் என்றால் ஆன்மீகத்தில் என்றும் மாறாத நிலையாகும். எந்தவித எதிர்பார்ப்புமின்றி தானதர்மங்கள் போன்ற புண்ணியச் செயல்களை செய்பவர்கள் இன்பம் அடைவதும், தங்கள் மகிழ்ச்சிக்காக பொய்கூறல், புறங்கூறுதல், கொலை, கொள்ளை போன்ற பாவச்செயல்கள் செய்பவர்கள் அனைவரும் உலகில் துன்பங்கள் அடைவதும் இயல்பு. இந்த தத்துவ வார்த்தைகள் என்றும் நிலையானது. இந்த வருடம் தானதர்மங்கள் போன்ற புண்ணியச் செயல்கள் செய்பவர்களுக்கு மட்டும்தான் இன்பம் சுகம் மோட்சம் கிடைக்கும். அடுத்த வருடம் புண்ணியச் செயல்கள் செய்பவர்களுக்கு மோட்சம் சுகம் போன்றவை கிடைக்காது என்பது ஆன்மீக தத்துவ வார்த்தைகள் எதுவும் இல்லை.

அதேபோல் இந்த வருடம் மட்டும் பாவச் செயல்களை செய்பவர்களுக்கு துன்பம் துயரம் போன்றவை இல்லை என்றும் அடுத்த வருடம் பாவச் செயல்களை செய்பவர்களுக்குத்தான் துன்பங்கள் வரும் என்பதை ஒரு கற்பனையாக நினைத்துப் பாருங்கள். உலகில் ஒரு குறிப்பிட்ட வருடத்தில் மட்டும் பாவங்கள் பெருகி, உலகில் அதர்மங்கள் பெருகிவிடும். எனவே ஆன்மீக தத்துவங்கள் எக்காலத்திலும் எந்நிலையிலும் மாறுவதில்லை என்பதை இதன்மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

உலகில் மனிதர்கள் தனக்கு வரக்கூடிய பலன்களைப்பற்றி எதிர்பாராமல் தானதர்மங்கள் போன்ற புண்ணியச் செயல்களில் ஈடுபடுபவர்கள் அவர்கள் வாழ்வில் எக்காலத்திலும் இன்பமாக மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். அவர்கள் ஆன்மீக வழியில் மன அமைதியையும் பெறுவார்கள். அதேபோல் பாவச்செயல்கள் செய்பவர்கள் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிக்க வேண்டும் மன அமைதியை இழக்கவேண்டும் என்பது உலக நியதியாகும். எனவே புண்ணியச் செயல்கள் மேற்கொள்பவர்களிடம் மன அமைதி தேடி வரும் என்பதை புரிந்து கொண்டு, ஆன்மீக வழியில் தானதர்மங்களில் மனம் ஈடுபடும்படி மனதை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(அமைதி தொடரும்)

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.



**தொடர்பு கொள்ள வேண்டிய எண்:**

# 9444228203

aanmeegamalar